



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருக, தமிழர் பொற்காலம்!

ஆசிரியர் :

வித்துவான் **க.ந. வேலன்**

இலண்டன்

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால்பெட்டி எண் : 1447

7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,

தியாகராய நகர்,

சென்னை - 600 017.

தொலைபேசி : 4342926

தொலைநகல் : 044-4346082

மின் அஞ்சல் :

Manimekalai @ eth.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ **வருக, தமிழர் பொற்காலம்!** |
| ஆசிரியர் | ➢ வித்துவான் க.ந. வேலன் |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2000 |
| பதிப்பு விபரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.2 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 108 |
| நூலின் விலை | ➢ ரூ. [redacted] |
| அட்டைப்பட ஓவியம் | ➢ திரு. *சாய்* |
| லேசர் வடிவமைப்பு | ➢ *கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர்*, சென்னை - 24. |
| அச்சிட்டோர் | ➢ *ஸ்கிரிப்ட் ஆப்செட்*, சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ➢ தையல் |
| வெளியிட்டோர் | ➢ **மணிமேகலைப் பிரசுரம்**, சென்னை - 17. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்



| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | முன்னுரை | 7 |
| | அணிந்துரை | 25 |
| | குருவணக்கம் | 37 |
| 1. | முதற்கவிதை | 39 |
| 2. | சீட்டுக்கவி | 40 |
| 3. | பேரனுக்கு வாழ்த்து | 41 |
| 4. | மங்கை நீ வாழ்க, வாழ்க! | 41 |
| 5. | மாணவனுக்கு ஒரு கவிதை | 42 |
| 6. | சம்பந்தனுக்கு | 44 |
| 7. | சீலமுணரும் திறம் | 44 |
| 8. | காலன் வந்தான் கணக்குச் சரியென்றான் | 45 |
| 9. | புலவனுக்குப் பொன்விழா | 46 |
| 10. | மாமனிதன் குமாருக்கு | 48 |
| 11. | வருக தமிழர் பொற்காலம் | 52 |
| 12. | அருண்பிரசாந்திக்கு அன்பான வாழ்த்துக்கள்! | 58 |
| 13. | பாவிடை ஆடிய தமிழ் | 61 |
| 14. | கலசம் தந்த சிந்தனை | 62 |
| 15. | சாவினை வென்றவன் | 64 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 16. | வந்தது வசந்தம் | 64 |
| 17. | ஏன் சிரித்தேன்? | 66 |
| 18. | ஏன் சினந்தேன்? | 69 |
| 19. | ஏன் அழுதேன் | 71 |
| 20. | அஞ்சலி மலர்கள் | 73 |
| 21. | யோகசுவாமி | 82 |
| 22. | உயிர்க்குறுதி மூன்று | 83 |
| 23. | அடைக்கலம் கொடுத்த மண்ணே | 83 |
| 24. | இலங்கையில் ஆங்கிலம் கற்றோர் இரண்டுவீதம் | 91 |
| 25. | ஒற்றுமைக்கு ஒரு பாட்டு | 91 |
| 26. | சீனுவாச சாத்திரி சொன்னதென்ன? | 96 |
| 27. | பல்கலை வேந்தன் சில்லையூர்ச் செல்வனின் பெரும் பிரிவு | 97 |
| 28. | தவறுகள் தவறுகளே! | 98 |
| 29. | பச்சைத் தமிழாலே பாட்டெழுத வைக்காதே! | 99 |
| 30. | காளையரே! கன்னியரே! | 101 |
| 31. | முதியோரே! முதியோரே! | 103 |
| 32. | கல்வியின் நோக்கமென்ன? | 105 |
| 33. | மாதினிக்குத் தந்தை வேலன் | 107 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றி

இந்நூலுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய இலண்டன் வாழ் கலைத் தம்பதியர் கவியுள்ளம் கொண்ட டாக்டர் சாந்திகுமார் - திருமதி சாந்தா சாந்திகுமார் ஆகியோருக்கு நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

இப்பதிப்புக்குத் தமது தாயார்/மாமியார், ஈழத்து மானிப்பாயூர் திருமதி தங்கரத்தினம் முத்துக்குமாரசாமியின் ஞாபகார்த்தமாக நன்கொடைப் பணவுதவி செய்த வைத்தியை சீதாதேவி மகாதேவாவுக்கும் அவரின் கணவர் பேராசிரியர் கோபனுக்கும் இத்தால் நன்றி தெரிவிக்கின்றேன்.

ஆக்கியோன்,

**க.ந. வேலன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## கவிதைபற்றிய சில சிந்தனைகள்

*கடவுள் என்றால் என்ன?*

"யாரேமுடியக் கண்டார்" - கம்பன்

**"பேர் அறியாமல் பிதற்றுகின்றேன்-**
**வேர் அறியாமல் விளம்புகின்றேனே"**- திருமூலர்.

*கவிதை என்றால் என்ன?*

கவிதையும் அப்படித்தான். பலர், பேர் அறியாமலும் வேர் அறியாமலும் என்னென்னவோ சொல்கிறார்கள்.

*கோதாவரி கிடந்தது. எப்படிக் கிடந்தது?*

சான்றோர் கவியெனக் கிடந்ததாம்!

*சான்றோர் கவி எப்படிக் கிடந்தது?*

கவிமன்னன் கம்பன், பன்னிரெண்டு ஆயிரம் பாடல் பாடியவன். அவன்கூடக் கவிதையை ஓர் உவமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுதான் விளக்குகிறான். உவமை என்பது ஒரு புடை ஒப்புத்தானே. ஆகவே, முழுமையாக விளங்கப்படுத்த முடியாத பொருள்களுள் கவிதையும் ஒன்று.

*காரணம் என்ன?*

கவிதை ஓர் உணர்வு
அது ஓர் அனுபவம்.

**"கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும் உணர்வு"** - தொல்காப்பியம்.

**"அது செவி நுகர் கனி"**- கம்பன்.

மாம்பழம் இனிக்கிறது
வாழைப்பழம் இனிக்கிறது
கரும்பு இனிக்கிறது
தேனும் இனிக்கிறது

இவையெல்லாம் ஒரே மாதிரியாக இனிக்கின்றனவா? இவற்றுக்கிடையேயுள்ள இனிப்பு வேறுபாடுகளைச் சொல்லமுடியுமா? வார்த்தைகளால் சொல்லமுடியாது. ஆனால், உணரமுடியும். கவிதையும் அப்படித்தான். கடவுளும் அப்படித்தான், காமமும் அப்படித்தான்,

**"தாய்க்குத் தன் மணாளனோடு கூடிய சுகத்தைச் சொல்லெனச் சொல்லுவதெங்ஙனே"** - திருமூலர்.

தாய்க்கும் சொல்ல முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பொருட்களுக்கும் உருவமும் உள்ளடக்கமும் இருப்பது போலவே, கவிதைக்கும் உருவமும் உள்ளடக்கமுமுண்டு. ஆனால், இவை கவிதைக்கு இரண்டாம் பட்சமே. முதன்மை பெறுவது கவித்துவமாகும். கவித்துவம் இல்லையானால் இவற்றால் பயனில்லை.

கவிதைக்கு உருவம் என்பது பா. (ஒலி வடிவம்) "**பா என்பது பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை**" என்பார் நச்சினார்க்கினியர். இதுவே யாப்பு.

உள்ளடக்கம் என்பது கவிதையின் பாவகம், ஊடு பொருள், உணர்த்தும் பொருள், முகந்து கொண்ட பொருள். கவித்துவம் என்பது, அது தான் விளங்கப்படுத்த முடியாதது என்று சொல்லிவிட்டார்களே!

ரசிகமணி டி.கே.சி. அவர்கள், கவிதையை ரசிக்க ஒரு வட்டத் தொட்டி நடத்தினாராம். அதில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, இராசாசி, கல்கி போன்றவர்கள் கலந்துகொண்டு ரசித்தார்களாம்.

கவிதையின் உருவத்தை உள்ளடக்கத்தைச் சொல்லிவிடலாம். ஆனால், கவித்துவத்தைச் சொல்லமுடியாது. ஒரு புலவன், தான் சொல்லவந்ததை எப்படிச் சொன்னான். அந்தச் சொன்ன விதத்திலேதான் கவித்துவம் உணரப்படுகிறது. அதனையும் ஒவ்வொருவரும் "தம்தம் அறிவு அறிவகை உணர்ந்துகொள்கின்றனர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைக்கு உருவமும் உள்ளடக்கமும் தேவை. ஆனால், கவித்துவம் இல்லையானால், அது, "**மண்மாண் புனைபாவையற்று**" என்னும் வள்ளுவத்துக்குச் சமனாகிவிடும். ஒப்பனை செய்யப்பட்ட பிணம் அவ்வளவே.

உருவம் இருந்தும், ஒலிச்சிறப்பற்ற வசன கவிதை 20 ஆம் நூற்றாண்டின் பிரசவம்தான். ஆனால், அதன் சாயலைப் புறநானூற்றுப் பாடலிலும் காணலாம்.

அழகான நங்கைக்கும் அளவான ஒப்பனை பொற்குடத்துக்குப் பொட்டுவைத்ததுபோலப் பொலிவு தரும். கவித்துவ மற்றதாயின் மரபுக்கவிதை விளக்கு மாற்றுக்குக் குஞ்சம் கட்டியது போலப் பரிகாசத்துக்கு இடமாகும்.

கலைப்படைப்புகள் எல்லாவற்றிற்கும் ஓர் ஓசையுண்டு. அதனாலேயே அவை காலத்தைவென்று சிறப்படைகின்றன. காலத்தைவென்று உலகம் முழுவதும் திருக்குறளும், பைபிளும், திருக்குரானும் பரவுதற்கு அவற்றின் ஓசையே காரணம்.

ஒலிபுறச் செவிக்குக் கேட்கும்; ஓசை அகச்செவியால் அகக்கண்ணால் உணரப்படும். ஓசை, உயர்வான இசைக்கலைக்கு மாத்திரம் உரியதல்ல. எல்லாக் கலைப்படைப்புகளுக்கும் பொதுவானதே! சிலர் பாடினால் சத்தம் கேட்கும். சிலருடைய மேடைப்பேச்சில் இரைச்சல் கேட்கும். சில நடிகர்கள் குதிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் எஸ்ஸின் இசையில் ஓசை கேட்கிறது. அண்ணாவின் சொற்பொழிவில் ஓசை கேட்கிறது. சிவாஜியின் நடிப்பில் ஓசை கேட்கிறது. வியனேடாவின்சியின் ஓவியத்தில் ஓசை கேட்கிறது. அஜந்தா, எல்லோரா, கயூரோ, மாமல்லபுரச் சிற்பங்களில் ஓசை கேட்கிறது.

"அம்மிபொழியச் சிற்பி வேணுமா" எனக்கவிக்கோ, அப்துல்ரகுமான் கேட்டார். ஆம் அம்மிபொழிவதும் உளிதான். சிற்பம் செதுக்குவதும் உளிதான். அம்மியில் ஒலி கேட்கும், சிற்பத்தில் ஓசை கேட்கும்.

தமிழ்க்கோட்டை கட்டிய குலவுசீர்ப்புகழ்த் தொல்காப்பியன் தமிழ் மொழியின் இலக்கணத்தை ஊடு பொருளாகக்கொண்டு, யாப்பமைப்பைப் பொருட்படுத்தாத சூத்திரம் எனப்படும் நூற்பாக்களால் தொல்காப்பியத்தை இயற்றினான். அந்த நூற்பாக்கள் பலவற்றில் ஓசை கேட்கின்றது.

சங்கப் பாடல்களிலும் வள்ளுவனிடத்தும், திருமூலனிடத்தும், இளங்கோவிடத்தும், கம்பனிடத்தும், பாரதியிடத்தும் ஓசைகேட்கின்றது.

செந்தொடை தழுவிய சங்கப்பாடல்களும், திருக்குறள்களும் பல உள்ளன. இவை யாப்பை மீறியவை. யாப்பிலக்கணத்தொடை அமையாதவற்றை, நாற்பது வயதுக்கு மேற்பட்ட மகளிரைப் பேரிளம் பெண்டிர் என்பது போலச் செந்தொடை என வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பதுக்குப் பின்னும் ஓர் அழகுண்டு. செந்தொடையிலும் ஓர் ஓசையுண்டு. மரபுக்கவிதை என்பது யாப்பிலக்கணம் அமைந்த கவிதையாகும். எழுத்தும், எழுத்துக்கள் சேர்ந்துவரும் அசையும், அசைகளால் அமையும் சீரும், சீர்களால் சேர்ந்த அடியும் கொண்டதே மரபுக்கவிதையாகும். இவற்றுள் மோனை தொடுத்துவரும் மோனைத் தொடையும், எதுகை தொடுத்துவரும் எதுகைத்தொடையும், கவிதையின் ஒலி வடிவுசிறப்பாக அமைய உதவுகின்றன. இந்தத்தொடைகள் அமையாமலும் சிறந்த கவிகள், தமிழில் உள்ளன. அவற்றை அமைப்பதற்குப் பெரும்புலமை வேண்டும்.

தொடை அமையாவிட்டாலும், ஓசை குன்றாத கவிதைகளே செந்தொடை அமைந்த கவிதைகளாகும்.

ஒரு கவிஞன், தன் உள்ளத்தைத் தொட்ட ஓர் உரிப்பொருளைக் (முதல், கரு, உரி) கவியாக்கும்போது, அது அறிவு நிலைகடந்து உணர்வுகள் உந்தப்பட்டுப் பிரசவமாகிறது. கவிதைப் பொருளுடனே அதன் ஓசையும் உருவாகிறது. உள்ளடக்கத்திற்கேற்ற உருவமும் உடனே பிறந்து விடுகிறது.

உள்ளடக்கம் முன்னும் உருவம் பின்னும் பிறப்பதில்லை. அவை உடன் பிறப்புக்கள். உள்ளடக்கத்தின் சுவைக்கேற்பவே உருவமாகிய ஓசையும் அமைந்துவிடுகிறது. இன்று உருவத்தை வைத்துக்கொண்டு உள்ளடக்கம் திணிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையாசிரியனின் மெட்டுக்குப் பொருத்தமான சொற்களை (அவை பொருளற்றவையாயினும்) அடைத்து மெட்டுக்குப் பாடித்துட்டுக்கள் சேர்க்கப்படுகின்றன.

யாப்பைப் புறக்கணித்துப் புதுக்கவிதை என எழுதப்படும் சினிமாப் பாடல்களும் இளையராசா, ரகுமான், தேவா போன்றோரின் இசை ஓசையாகிய யாப்பணிந்தே புகழ் பெறுகின்றன. எனவே, யாப்பில்லாத கவிதை எத்துணைக் கவித்துவமுடையதாயினும், பட்டை தீட்டப்படாத வைரம் போன்றதே.

கவிஞன், கவிதையை எழுதுவதில்லை. கவிதையை இசைக்கிறான். ஒலிநாடாவைப்பார்த்துப் படித்து ரசிக்கமுடியாது. பாடக்கேட்டுத்தான் ரசிக்கமுடியும். எழுத்துக்கள் அசையாகி அசைக்கப்படும் போது இசை பிறக்கிறது.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்பதற்குத் தமிழ்க்கவிதைகளிலே ஏராளமான சான்றுகள் உள்ளன. செந்தொடையாலமைந்த பின்வரும் புறநானூற்றுப் பாடலைப் பாருங்கள்.

காலையில் குதிரை மீதேறிப் போர்க்களத்துக்குச் சென்ற தன் கணவனை மாலையில் எதிர்பார்த்து அவன் வரும் வழியில் காத்து நிற்கிறாள் அவள். போர் முடிந்து எல்லார் மாவும் திரும்ப வீடு நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த மறவன் சென்றமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவில்லை. அவளது ஏக்கம் ஒரு கவிதையாகிறது. கவிதை பிறக்கும் போதே உருவமும் பிறக்கிறது.

"மா வாராதே மா வாராதே
எல்லார் மாவும் வந்தன; எம்இல்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் தந்த
செல்வன் ஊரும் மா வாராதே"

"இருபேர் யாற்ற ஒருபெருங் கூடல்
விலங்கிடும் பெருமரம் போல
உலந்தன்று கொல் அவன்மலைந்த மாவே"

மா என்னும் ஓரசையே ஒரு சீராக அமைந்து விடுகிறது.

"மாவரக்காணோமே, மாவரக்காணோமே
எல்லார் மாவும் வந்துவிட்டனவே
எம் இல்லம் விளங்க ஒரு புதல்வனைத் தந்த செல்வன்
ஊர்ந்து சென்ற மா வரக்காணோமே."

போர்வீரர் போர் முடித்துத்திரும்பிச் செல்லும் வழியில், புதல்வனைத் தழுவியபடி சோகத்தோடு ஏங்கிநிற்கும் ஒரு அபலையைக் காண்கின்றோம். எல்லார் மாவும் வந்தன என்பதும் எம்இல்(விளங்க) புதல்வன் தந்த செல்வன் என்பதும் கவித்துவத்தின் உச்சம்.

"இரண்டு ஆறுகள் கூடி மோதுமிடத்தில் அகப்பட்ட பெரு மரம்போல அவன் சென்ற மாவும் இரு பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையிடை அகப்பட்டு அழிந்ததோ" என ஏங்குகின்றாள். கணவன் இறந்துவிட்டான் என்பதைத் தெரிந்தும் அதனைச் சொல்லமுடியாத அன்புள்ளம், 'அவன் சென்ற மா உலந்தன்று கொல்' என்று எண்ணுகின்றது.

இந்தக் கவிதையிலுள்ள பொருளைச் சொல்ல முடிந்ததே தவிர, பெரிதும் யாப்புத் தழுவாத இக்கவிதை வெளிப்படுத்தும் ஓசையை, கவித்துவத்தைச் சொல்லமுடியவில்லையே! அந்தத் தலைவி போல நாமும் ஏங்குகின்றோம்.

இசைஞானம் உள்ளவர்களுக்கு யதேச்சையாக வந்துவிழுகின்ற தாளம் போல (அவர்கள் மாத்திரை எண்ணித் தாளம் போடுவதில்லை), கவித்துவமுள்ளவர்களுக்கு யாப்பும் இயற்கையாக அமைந்துவிடுகின்றது.

"**ஆறுவது சினம்**" இதுவும் கவிதைதான். இதன் பொருள் ஆழத்தை உணரும்போது, அதனை ஒளவை வெளிப்படுத்திய அழகை உணரும்போது, இதிலுள்ள கவித்துவம் புலனாகும். இங்கு யாப்பில்லை; ஆனால் ஓசை இருக்கிறது.

"**சீரைத் தேடின் ஏரைத்தேடு**" இங்கு பொருள் அழகோடு யாப்பழகும் கவிதையை அழகு செய்கின்றன.

"**பெண்ணே,**
**உன்னைக் கண்ட போது,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை மறந்தேன்
உன் தங்கையைக் கண்டபோது
உன்னையே மறந்தேன்."

"இரவின் இரகசியங்களைச்
சொல்லிவிடப் போகின்றதே என்பதற்காகக்
காலையில் விளக்கின் நாக்குத்
துண்டிக்கப்பட்டு விட்டது."

"நாங்கள், நிர்வாணத்தை விற்கிறோம்.
ஆடைகள் வாங்குவதற்காக."

சமத்காரமான இந்தப் புதுக்கவிதைகள் கவித்துவம் நிறைந்தவை. ஆனால், பட்டை தீட்டப்படாத வைரங்கள்.

கனராகங்களுக்கு ஆதாரமான ஏழிசைதான் பொப்பிசைக்கும் ஆதாரம். பொப்பிசை ஓர் எதிர்வீச்சு; புதுக்கவிதையும் ஓர் எதிர்வீச்சு!

தமிழ்மொழி சிறந்த கவிவளம் கொண்டது. அது பாவிடை ஆடிய தமிழ்மொழி. அம்மொழியில் சங்க காலத்திலேயே, சிறந்த கவிதைகள் எழுதப்பட்டுவிட்டன. சங்கக் கவிதைகளைச் சுவைத்தவர்களுக்கு, பிற்காலக் கவிதைகள், கரும்புந்துவர்த்துச் செந்தேனும் புளித்து அறக்கைத்ததுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஐயோஎனின் நான்புலி அஞ்சுவலே"**
**"கலஞ்செய்கோவே, கலந்செயகோவே"**
**"யாயும் ஞாயும் யாராகிய ரோ"**

எனத்தொடங்கும் கவிதைகள் கவிதையின் கொடுமுடியைத் தொட்டுவிட்டன.

வெறும் கவித்துவத்தினால் மட்டும் கவிதையோ, கவிஞனோ அழியாப்புகழ் பெறுவதில்லை.

மக்கட்பண்பற்ற, மனித நேயமற்ற, உலகந்தழுவும் ஒப்பமற்ற, புலமைக் காய்ச்சலால் சிறியன சிந்திக்கும் கவிஞர்களோ, அவர்தம் கவிதைகளோ போற்றப்படுவதில்லை.

ஒரு கவிதை, இரு கவிதை மாத்திரம் புனைந்துள்ள சங்கப் புலவர், வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். கணியன் பூங்குன்றன் என்னும் சான்றோன் இரண்டு கவிதைகளே புனைந்துள்ளான்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என உலகந்தழுவும் ஒப்பற்ற கவிதை அதன் பொருள்வளத்தினாலும், அதனைப் புலப்படுத்திய கவித்துவவத்தினாலும் மாத்திரம் போற்றப்படவில்லை. அந்தக் கவிதைமூலம் அந்தச் சான்றோனின் உள்ளத்தின் உயர்வும், ஆன்மீக முதிர்ச்சியும் மெய்சிலிர்க்க வைக்கின்றன. பொருளுக்கும் கவித்துவத்துக்குமப்பாலே அவற்றின் பிறப்பிடமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞனின் மெய்யுணர்வுக் காட்சி, ஆழ்ந்திருக்கும் கவி உள்ளம், 2000 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கவிஞன் பெற்றிருந்த சீவன் முத்த நிலை நம்மை உருக்கிவிடுகின்றது.

வெறும்புலமையினால் மாத்திரமல்ல, மெய்ஞ்ஞான தத்துவ தளத்தில் நின்ற சீவன் முத்தர்களே இக்கவிஞராவர். அவர்கள் எழுதுவதில்லை, சொல்லுவதில்லை. திருவாய் மலர்ந்து அருளுகின்றார்கள். திருவள்ளுவர், திருக்குறளை அருளிச் செய்தார் என்று சொல்வதின் பொருள் இதுதான்.

காரைக்கால் அம்மையார், ஔவையார் போன்றவர்கள் அருளிய பாடல்கள், சீவன் முத்த நிலையில் நின்று வெளிவந்தவையாகும்.

தொல்காப்பியன் முதல் பாரதிவரை இந்தச்சீவன் முத்தக் கவிஞர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். பலர் தமது தினவுதீர்க்க எழுதுகிறார்கள்.

ஒட்டக்கூத்தனிடம் புலமை இருந்தது. ஆனால், கம்பன், புகழேந்தி போன்றவர்களிடம் பண்பாடும் இருந்தது. புலமைக்குத் தலைவணங்குவோம்; பண்பாட்டுக்கோ அடிதொழுவோம்!

இவர்களின் பாடல்தொகையை வைத்து இவர்கள் அளக்கப்படுவதில்லை.

கணியன் பூங்குன்றனின் அந்த ஒரு பாடல் போதும் அவனுக்கு நோபல் பரிசு வழங்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலமாம் வனத்தில்" என்று தொடங்கும் பாரதியின் ஒரு பாடல் போதும், அவனது தத்துவத்தளத்தை உணர்ந்து நோபல் பரிசு வழங்க.

தாகூரின் கீதாஞ்சலிக்கு எதற்காக நோபல்பரிசு வழங்கப்பட்டது? அதன் அளவு கருதியா? பொருள் கருதியா? புலமை கருதியா? இல்லை. அவன் நின்ற தத்துவதளம் கருதி!

யோன்பனியன் என்னும் ஆங்கிலக் கவிஞன் தன் 13ஆம் வயதிலேயே ஒரு வரி எழுதி உலகப் புகழ்பெற்றுவிட்டான். அதன் பொருளும் புலமையும் மாத்திரமல்ல, அவை உதித்த தத்துவதளத்தைக் கொண்டே அவன் மதிக்கப்பட்டான்.

இரட்சண்ய யாத்திரீகம் என்னும் காவியத்தை அவன் பிற்காலத்தில் புனையப்போவதன் தளம் அன்றே அமைக்கப்பட்டுவிட்டது.

"**யேசுநாதர் தண்ணீரைத் தொட்டார், வயினாகமாறி விட்டது**" இந்தத் தலையங்கத்தில் முதிர்ந்த புலமையாளர் பலர், பக்கம் பக்கமாக எழுதினர். அவனோ, தண்ணீர் தன் நாதனைக் கண்டு நாணத்தால் சிவந்தது (Water saw its Lord and Blushed) என்று மாத்திரம் ஒரு வரி எழுதிக்கொடுத்து விட்டு வந்துவிட்டான். அந்தக் கவிதையின் ஆழத்தை உணர்ந்த சான்றோர் அந்தச் சிறுவனுக்கே பரிசை அளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வெளிப்பாடுகள் பல இருக்கின்றன. அவற்றுள் கவிதைக்கு ஈடு கவிதைதான். அதனாலேதான் கவிஞன் பிறக்கிறான் என்று சொன்னார்கள். இதனைத் தமிழ்க் கவிதைகளில் காணலாம். எப்படிப் பாடினரோ" எனச் சுத்தானந்த பாரதி வியப்படைகிறார். திருவள்ளுவரைத் தெய்வத்தின் அவதாரமென்றும் தெய்வத்தைப் பிராட்டி என்பதுபோல ஔவைப்பிராட்டி என்றும் வணங்கினார்கள். எனவே கவிதை என்பது வெறும் சொல்லலங்காரமும் அல்ல; பொருள் அலங்காரமுமல்ல. அது நாத தத்துவத்தின் வெளிப்பாடு. அதுவே நாதம்; அதுவே நாதாந்தமாகும்.

அத்தகைய கவிதைக் கலைபற்றி நானேதும் அறியேன். ஆசை பற்றி அறையலுற்றேன் என்று அவையடக்கமாகக் கூறலாம். நான் எழுதியவை கவிதைகள் என்றோ, நான் கவிஞன் என்றோ கூற என் நாகூசுகிறது. நினைக்க நெஞ்சு வலிக்கிறது.

"தரணி பொறுக்குமோ நானும் புலவனெனல்" என ஒரு புலவன், அறமுரைத்த வள்ளுவன் போன்றாரை நினைவிற்கொண்டு கூறினான்.

நான் எழுதியவற்றுள் பல ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் பீறிட்டுக் கொண்டுவந்தவை. எனது முதற்கவிதையே, அத்தகைய பிரசவந்தான்.

தாங்க முடியாத கவலை, வீட்டைப் பிரிந்த கவலை. ஆறுதலற்ற சூழல். இத்தகைய நிலையில் தங்குதடையில்லாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஓட்டமாக மனத்தைவிட்டுப் பீறிட்டுக்கொண்டு பாய்ந்தது அந்தக் கவிதை.

கவிதை இலக்கணம் எதுவும் அறியாத பருவம். வயது 13. காதலில் மாத்திரமல்ல, கவலையிலும் கவிதை பிறக்கும்.

கூடிய வரையில் சந்தர்ப்பங்களைச் சுருக்கமாகச் சொல்ல, எத்தகைய பின்னணியில் அவை பிறந்தன என்பதைச் சொல்லியிருக்கிறேன்.

சில கவிதைகள் இன்பதுன்பச் சூழலில் தோன்றியவை. இன்னும் சில, நெஞ்சக் கொதிப்பின் வெளிப்பாடு. இலண்டனுக்கு வந்த பின்னும் இந்தக் குளிரிலும் கொதிக்கும் என்னெஞ்சைச் சில கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

தர்மா வேசம் என்னோடு கூடப்பிறந்தது. ஆனால் "கொலைவாளினை எடடா" என்று கூறமாட்டேன்.

வள்ளுவரிடமும் பாரதியிடமும் தர்மாவேசம் உண்டு. ஆனால் பண்புதவறி அவர்கள் பேசமாட்டார்கள்.

பொய்யறியாத அப்பாவிகளாக, வாழத் தெரியாதவர்களாக இவர்கள் வாழ்ந்தார்களே என்று நினைக்கும் போது நெஞ்சு வெடிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உண்மையே அழகு; அழகே உண்மை' என்று செல்லி சொன்னானாம். அந்த அழகாகிய உண்மையை இவர்களிடம் காண்கின்றேன். பொய்யடிமை இல்லாத இந்தப் புலவர்களுக்கு நான் வழி வழியடியேன்.

கவிதைக்குப் பொய்யழகு என்று கவிபாடும் காலமிது. 'பொய்பிறந்தது புலவர் வாயிலே' என்னும் தலைப்பில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஏ.சி. செட்டியார் தலைமையில் அந்தக் கருத்தை மறுத்துப் பேசினேன். கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. பொய் என்பதற்குக் கற்பனை என்பது பொருளோ? பொய்யும் கற்பனையும் ஒன்றா?

அறங்கள் பலவற்றைக் கூறிய வள்ளுவன், உயர்த்திக் கூறும் அறங்கள் இரண்டு, உயர்ந்த அறம் கொல்லாமை, அதன் பின் சாரப் பொய்யாமை என்பான்.

எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கின்றேன். எனது கணிப்பின்படி கம்பனுக்குப் பிறகு பாரதி; பாரதிக்குப் பிறகு யாரும் இல்லை.

எட்டு நூற்றாண்டாகப் புலமை வறண்டிருந்த தமிழ் நாட்டில் பாரதி மழை பொழிந்தான் என்பதை அவனே.

"கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே"

எனக்கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் பொய்யடிமையில்லாத புலவனைப்பெறத் தமிழ்த்தாய் தவங்கிடக்கிறாள்.

"வாழ்தல் வேண்டிப் பொய்கூறாத"
"செய்யாகூறிக் கிளக்காத"
"அறவிலை வணிகம் செய்யாத"
"வணிகப் புலமையற்ற" - புறநானூறு.

"இந்த எழுதுகோல் தெய்வம். இந்த எழுத்தும் தெய்வம்" என்று கூறி, நமக்குத் தொழில் கவிதை எனக் கவிதையே வாழ்வாக வாழ்ந்த தமிழ்க்கவிகளின் திருவடிகளை வணங்கி இந்நூலை அவர்கள் திருவடியில் சூட்டுகின்றேன்.

நிறைவாக,

என் சிறுமையை நான் நன்கு உணர்வேன். ஆனால் என் தகுதிக்கு மேல் கோடி கோடியாக வள்ளல் முருகன் வாரி வழங்கிக் கொண்டேயிருக்கிறான். அவற்றுள் ஒன்று சாதாரண ஆசிரியனான எனக்குக் கிடைத்த அசாதாரண மாணவச் செல்வங்கள். அவர்களுக்குக் கற்பித்ததின் மூலம் நான் கற்றவை எத்தனையோ! அங்ஙனம் பெற்ற செல்வங்களுள் மாணவனாக வந்து என் மூத்தமகனாகக் கடந்த 35 ஆண்டுகளாக என்னோடு வாழ்ந்துவரும் திரு. அ.சிவபாத சுந்தரம் அவர்கள் பட்டயக் கணக்காளர், அபுதாபியில் பெரும்பதவி வகித்துவிட்டுச் சமீபத்தில் ஓய்வு பெற்று இலண்டனில் வாழ்ந்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தவர் பலரைப் பார்த்திருக்கிறேன். ஆனால் பண்பாளரை விரல்விட்டு எண்ணிவிடலாம். வயது 15இல் அவனிடம் கண்ட பணிவை இன்றும் கண்டு நெஞ்சு குளிர்கின்றேன்.

இளையான் அடக்கமே அடக்கம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. தெளிந்த நடுநிலைச் சிந்தனை, ஆழ்ந்திருக்கும் கவியுளம் காணும் அறிவின் மதுகை; இப்படி எத்தனையோ. அவர் வழங்கிய அணிந்துரை நூலை அணி செய்கின்றது. அன்னாருக்கு நன்றி.

'காரைக்கால் அம்மையாரின் வாழ்வும் வாக்கும்', 'ஈழத்துயோக சுவாமிகள் ஏற்றிய ஞானவிளக்கு' ஆகியவற்றைப் பதிப்பித்து உதவிய மணிமேகலைப் பதிப்பகத்தாரே, இந்நூலையும் பதிக்கும் பேறு பெற்றேன். அவர்கள் அனைவருக்கும் என்னுளமார்ந்த நன்றி கூறி அமைகின்றேன்.

இங்ஙனம்
***வித்துவான் க.ந. வேலன்***
**8, Rose Court,**
**Bluebellway,**
**Ilford,**
**Essex /g/ 2ln, U.K.**
**T.P. 0208-514 0864.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

"நான் அவ்வப்போது எழுதிய கவிதைகள் சிலவற்றை- பல கவிதைகளை நான் சேகரித்து வைக்கவில்லையெனிலும், அவைகளை நினைவு மீட்டி ஒரு புத்தகமாக வெளியிட இருக்கிறேன். அதற்கு நீங்கள்தான் அணிந்துரை எழுத வேண்டும்."

பல வருடங்களாக - அவர் ஆசிரியராகவும், நான் மாணவனாகவும் பரிச்சயம் ஆரம்பித்த பராயத்தில் இருந்தே - எனது மதிப்பிற்கும், அன்பிற்கும் பாத்திரமான வித்துவான் வேலன், தொலைபேசியில் கூறிய பொழுது, சில கணங்கள் என்ன சொல்வது எனத்தெரியாது திகைத்து நின்றேன்.

ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு, மானசீகமாகவே,

"ஏன் இப்படி எனது தகுதிக்கு மிஞ்சிய பெருமையையும், பாரத்தையும் தருகிறீர்கள்?" என்றேன்.

"இல்லை! நீங்கள்தான் எழுதவேண்டும். அதுவே எனது விருப்பம்." என்று கூறினார்.

கூறியது மட்டுமின்றி, அடுத்த வாரமே, அவரது மனைவியுடன் எனது வீட்டுக்கு வருகை தந்து, கவிதைத் தொகுப்பின் கையெழுத்துப் பிரதியை, கையளித்துவிட்டுச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைச் சொல்கிறேன்: அவரிடம் இருந்து அதனைப் பெறும்போது மெய் சிலிர்த்தது!

"உள்ளத்தில் எழும் உண்மை உணர்வுகளை எழுதுங்கள்"

சுமையைத் தந்தது மட்டுமல்லாமல், அவருடைய பாணியிலேயே, அதை எப்படிச் சுகமாகச் சுமப்பது என்பதற்கு வழியையும் சொல்லிவிட்டுச் சென்றார். உண்மையை எழுதுவது; உண்மையாக வாழ்வது எளிது;

பொய்யை எழுதுவதுதான் சிரமம், பொய்மையாக வாழ்வதுதான் கடினம்.

**கவிதை என்றால் என்ன?**

நூலாசிரியர், முகவுரையாகவே கவிதை பற்றிய தனது தெளிவான எண்ணங்களை, அழகாக, நேர்த்தியாக எழுதியிருக்கிறார்.

இத்தொகுப்பின் எல்லாக் கவிதைகளுமே எல்லோருடைய உள்ளத்தையும் தொட்டிருக்க வேண்டியதில்லை. ஆனால், அவருடைய முகவுரை எல்லாக் கவிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும் பின்புலனாகப் பயன்படக்கூடிய ஒரு தெளிவான விளக்கவுரை.

உந்தும் உணர்வுகளின் வடிகாலாக, நானும் ஏதாவது கவிதை என்று கிறுக்கும் பொழுது, எப்பொழுதோ நான் படித்த ஈழத்து கவிஞன் - அமரர் "மஹாகவி" என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறேன் - எழுதிய கவிதை வரிகள் ஞாபகத்திற்கு வரும்.

"பிஞ்சுப் புது நெஞ்சில் பொங்கிவரும் கவிதையில்-
அட, கிஞ்சித்தும் அழகு கிடையாதாம் - கேட்டாயா?

ததும்பும் சந்தத்தின் வீரியம் ஒரு புறம் இருக்க, கவிதையின் ஊற்றையே சுட்டிக்காட்டும் அரிய வரிகள் அவை என்பது எனது எண்ணம்.

நல்ல கவிதை பிறக்க வேண்டுமாயின் நெஞ்சம் பிஞ்சாக இருக்கவேண்டும்.

அறிவு முதிர்ந்திருக்கலாம்; வாழ்ந்த ஆண்டுகள் பலவாக இருக்கலாம். ஆனால், நெஞ்சம் மட்டும் பிஞ்சாக இருக்கவேண்டும்; பிஞ்சாக மட்டுமல்ல அது புதிதாகவும் இருக்கவேண்டும்.

தூசுபட்ட கண்ணாடி எப்படி பிம்பத்தை பிரதிபலிக்க முடியும்?

மாசுபட்ட உள்ளம் நல்ல கவிதைகளின் ஊற்றாக இருக்கமுடியாது.

பிஞ்சுப் புது நெஞ்சு மட்டும் இருந்தால் போதாது. அந்தப் பிஞ்சுப் புது நெஞ்சில் உணர்வுகள் இருக்கவேண்டும். அந்த உணர்வுகள் பொங்கி வரவேண்டும்.

அவைகள்தான் கவிதைகளாக உலா வரமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகள்தான் காலத்தை விஞ்சிய, அழகு ததும்பும் இலக்கிய சிருஷ்டிகளாக வலம் வரமுடியும். "வேலன் மாஸ்டர்" என அவருடைய பல மாணாக்கர்களாலும், அவருடைய வித்துவத்தை விரும்பும் மற்றும் பலராலும், அன்பாக அழைக்கப்படும் வித்துவான் வேலனும் ஒரு பிஞ்சுப் புது நெஞ்சின் சொந்தக்காரனே!

அந்தப் பிஞ்சுப் புது நெஞ்சில் பொங்கி வரும் எண்ணங்களில், சிந்தனைகளில், வார்த்தைகளில், எனக்குத் தெரிந்தவரை, என்றுமே போலி இருந்ததில்லை.

மூடி மறைத்து, மெழுகி, முக்காடு போட்டு அவர் எதையும் சொன்னதும் இல்லை. செய்ததும் இல்லை. அந்தப் பாணி அவருக்குப் பழக்கம் இல்லை.

நியாயம், தர்மம் என்று நினைத்து விட்டால், 'பட்'டென்று சொல்லிவிடுவார்.

அதற்கு அவர் படித்த பைந்தமிழ் நன்றாகவே கை கொடுக்கும்.

பிள்ளைப் பராயத்தில் - தனது பன்னிரண்டாவது வயதில் - வானொலிப் பெட்டி மேல் எழுதி வைத்துவிட்டுச் சென்ற அவரது முதற் கவிதையிலேயே அவரின் தன்னம்பிக்கை, சுதந்திர மனப்பான்மை, உள்ளாத்மாவின் வேட்கை வெளிப்படுகிறது.

"நான் சென்று நலிந்து நின்று நன்மை பல சொல்லி இவ் ஊன் தன்னை வளர்த்திடலாம் உனக்கடிமை செய்யாதே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என்ற வரிகள் அவர் வாழ்வின் எதிர் காலத்தையே கோடிட்டு காட்டுவதாக அமைந்துவிட்டது.

தன் வாழ்வில் நலிந்து நின்றுதான் நன்மைகள் பல சொன்னார், எவருக்கும் அடிமை செய்யாது தான் ஊன் தன்னை வளர்த்திட்டார்.

நூலாசிரியர், தனக்குத் தாக்கமளித்த, தனக்கு மட்டும் சம்பந்தப்பட்ட சிலரைப் பற்றிய, தனது சொந்த உறவை உணர்த்தும் கவிதைகள் சிலவற்றை இத்தொகுதியில் இணைத்திருக்கிறார்.

அக்கவிதைகளின் பின்னணியை கவிதைகளின் ஆரம்ப அறிமுக உரைமூலமாக ஓரளவு புரிந்தாலும், சம்பந்தப்பட்டோரைத் தெரிந்தவர்களைத் தவிர, அவற்றின் பொருளடக்கம் சாதாரணமானவர்களின் நெஞ்சில் நிற்க நியாயமில்லை.

உதாரணம்,

"பேரனுக்கு வாழ்த்து"
"மங்கை நீ வாழ்க, வாழ்க"
"மாணவனுக்கு ஒரு கவிதை"
"புலவனுக்குப் பொன் விழா"

சில கவிதைகள், அவ்வப்போது எழுதியவை என்பதைவிட, பொருளிலோ, அமைப்பிலோ, நெஞ்சில் நிற்பதாக இல்லை; காரணம் அவை முழுமை பெற்ற கவிதைகளாக எமக்குக் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்,

"சம்பந்தனுக்கு"
"காலன் வந்தான் கணக்குச் சரி என்றான்"

எனினும், அக்கவிதைகளில் கூட 'பளிச்' என்று பீறிடும் சில வரிகள் மனதில் நிற்கின்றன.

"வாயைப் பெரிதாக்கி வயிற்றை நிரப்புகின்றோம்,
தீயற் புகுந்தெமக்காய் தியாகங்கள் புரிகின்றார்."
("புலவனுக்குப் பொன்விழா")

"காலன் வந்தான் கணக்குச் சரி என்றன்
வேலன் நான் என்ன செய்வேன் விதியென்று வீடு வந்தேன்"
("காலன் வந்தான்...")

ஆசிரியர் தன்னை வளம்படுத்திய ஆன்றோர் சிலருக்கு தனது அஞ்சலியாக கவிதை மலர்களைத் தூவியிருக்கிறார். தூவிய மலர்களில், பாரிய மலர் பாரதிக்கே - ஆசிரியர் வரித்த கவிக்காதலன் அவன்!

வித்துவான் வேலன், தனது பேச்சாலும், எழுத்தாலும் பாரதியாரைப் பலருக்கும் அறிமுகம் செய்து, மற்றையோரும் தனது காதலனைக் காதலிக்க வைத்த பெருந்தகையாளன்.

நானும் தான், பள்ளிப்பராயத்தில், அவரின் பாரதி பற்றிய பேச்சினால், பண்ணமைத்து பாரதி பாடல்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பேச்சுக்களில் புகுத்திய பாங்கினால், பாரதியின் பித்தனானேன்.

சங்கத் தமிழ்ச் சான்றோன் என்றாலும், பாரதி போலவே, பண்டிதர்கள் மட்டுந்தான் படித்துப் பொருள் உணர முடியும் என்றில்லாமல், இலகுவில் விளங்கக்கூடிய சொற்பிரயோகங்கள் கொண்டு நூலாசிரியரும் தனது கவிதைகளை அமைத்திருக்கின்றார்.

பாரதியின் பாதிப்பு அவரது சில கவிதைகளில் நன்றாகவே நெடி வீசுகிறது.

"மோகத்தை கொன்றுவிடு. அல்லாலென் மூச்சை நிறுத்திவிடு" என இறைவனிடம் இறைஞ்சினான் பாரதி.

ஆசிரியரோ விஞ்ஞானியிடம் வேண்டுகிறார் :

"கருவைத் தடை செய்யக்
கருவிகள் எத்தனையோ
கண்டு பிடித்த கற்றவரே
கை தொழுதேன்
காமத்தைத் தடை செய்யக்
கருவி ஒன்று வேண்டாமோ?"

("பச்சைத் தமிழால் பாட்டெழுத வைக்காதே")

பாரதியார் "காலனே சற்றே இங்கே வாடா, காலால் உனை மிதிப்பேனடா" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர், தனது "பச்சைத் தமிழால் பாட்டெழுத வைக்காதே" என்ற கவிதையில், "மன்மதனைக் காலால் மிதிப்பேன்" என்பதோடு விடாமல், அவனைக் காலனிடம் ஒப்படைப்பேன் என பயமுறுத்துகிறார்; 'சந்தைத் தமிழில்' சாடுகிறார்.

"சென்றதினி மீளாது மூடரே..." என்றார் பாரதியார். ஆசிரியர் சொல்கிறார்.

**"நிறைவேறா ஆசைகளை**
**நீற்றுப் போன நினைவுகளை**
**நெஞ்சம் வைத்து ஏங்காதீர்**
**நினைவில் வைத்துச் சாகாதீர்."**

("முதியோரே முதியோரே")

இலங்கை அரசியல் அவலம், ஈழ விடுதலைப் போரின் வேகம், அதன் ஓலம், அவரது கவிதைகளில் கவித்துவம் பெறத்தவறவில்லை.

**"வேழத்தை வீழ்த்தி விடியலை நோக்கியெழும்**
**வேங்கைகளின் போராட்ட வேகத்தால் ஈழம் மலரும்"**

("வருக தமிழர் பொற்காலம்")

**"வெல்லும் தமிழீழ வேருக்கு நீரே நீ."**

("புலவனுக்குப் பொன்விழா")

**"ஆரென்ன சொன்னாலும் சொல்லட்டும், தமிழீழப்**
**போர் ஏனென்று எதற்கென்று பொழுதெல்லாம் நினைவாக"**

("மாமனிதன் குமாருக்கு மாநிலத்தின் அஞ்சலிகள்")

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சத்தியமுணரா இந்தச் சளக்கர்களால் ஈழநாடு
யுத்தத்தில் அழியுதையோ....."
("ஏன் சினந்தேன்")

"பிரித்தல் கணக்கைப் படித்துவிட்டோம் - நன்றாக
கழித்துப் பார்க்கவும் கற்றுவிட்டோம்
கூட்டல் கணக்கை மறந்துவிட்டோம் - ஐயோ
கூடி வாழவும் மறந்துவிட்டோம்.
("ஒற்றுமைக்கு ஒரு பாட்டு")

வித்துவான் வேலனின் ஆழ்ந்த ஆன்மீகக் கருத்துக்கள் தொகுதிக்கு செழுமை சேர்க்கின்றன.

'கலசம் தந்த சிந்தனை' என்ற கவிதையில் "நான் போனால் நான் வருவேன்" என்ற வரிகள் வருகின்றன. ஆணவம் (நான்) அகன்றால், ஆண்டவன் (நான்) வருவேன் என்ற தத்துவத்தின் சாரத்தை விளக்கும் ஆழமான அடிகள்.

கோபத்திற்கு விளக்கமளிக்கிறார்.

"என்னை விழுங்கி என் செயலைத் தனதாக்கி, இழுத்து நிலை குலைத்து சின்னவனாக்கும் சினம்..." தனது இறை நம்பிக்கையை அழகாக கூறுகிறார் :

"அறிவினைக் கொண்டும் அகவுணர்ச்சியைக் கொண்டும்
அன்றாட வாழ்க்கை அனுபவங் கொண்டும்
உறு பொருள் ஒன்றுண்டு உணர்கின்றேன் உண்மையாக
("ஏன் சினந்தேன்")

இலண்டன் மாநகரம் ஏன் கூடலுக்கும் களியாட்டத்திற்கும் உகந்த இடம் என்பதைப் பண்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தில் குறிஞ்சி நிலம் பற்றிக் குறிப்பிடுவதைக் கோட்பாடு காட்டி விளக்கும் ("கலசம் தந்த சிந்தனை") ஆசிரியரும், ஈழத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக சூறாவளியினால் இடம் பெயர்ந்து இலண்டன் புகும் நிர்ப்பந்தத்திற்கு ஆளானவர்களில் ஒருவர்.

நன்றியின்றி, தஞ்சம் புகுந்த இந்நாட்டினரைக் கேவலமாகவே பேசும் ஈழத்தமிழர்கள் பலர் இங்கு இருக்கிறார்கள்.

ஆனால் ஆசிரியரோ, "நன்றி ஒன்று எண்ணிட நமச்சிவாயம் புகலிடம்" என, அவரே ஒரு கவிதையில் எழுதியதிற்கு ஏற்ப, இலண்டனின் அருமை பெருமைகளையே, "அடைக்கலம் கொடுத்த மண்ணே" என்ற கவிதையில் காண்கிறார்.

இங்கிலாந்து அளிக்கும் உதவிகளை,

"தகுதியைப் பார்த்தா தந்தான்? தர்மத்தைப் பார்த்துத் தந்தான்
தங்கள் தகுதியைக் காக்கத் தந்தான்" - எனப் போற்றுகிறார்.

தாய்நாடு என்று கூறி, அண்டைத் தமிழ்நாட்டிற்குச் செல்வோரை, நாதியற்று, நடுத்தெருவில் நிற்க வைக்கும் தமிழ் நாட்டினரை "தாய் நாடு சேய் நாடு தாற்பரியம்! தமிழுக்கு உயிர் கொடுக்கும் தாற்பரியம்" என 'நக்கல்' செய்து நெஞ்சம் குமுறுகிறார்.

தேனூறும் திருவாசகத்தைப் படித்து, இறைவன்மேல் காதலாகிக் கசிந்து உருகி அழுதோர் அநேகர். வித்துவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலன், திருக்குறள், படித்து, கசிந்துருகி அழுதிருக்கிறார். காரணங்களும் கூறியிருக்கிறார். ("ஏன் அழுதேன்")

சத்தியந்தான்!! - அழகான, ஆழமான எழுத்துக்கள்; புல்லரிப்பை ஏற்படுத்தும் புனிதக் கருவிகள்; ஆத்மாவின் அடிநாதத்தைத் தொட்டுக் கண்ணீரைப் பெருக வைக்கும் தன்மையைத் தனக்குள்ளே கொண்டவையே!

நூலாசிரியர், நகைச்சுவையையும் விட்டு வைக்கவில்லை.

"கல்வியின் நோக்கம் என்ன?" என்ற கவிதை, யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு முறையில், இத்தனைக்கும் சந்தம் சற்றும் பிறழாமல், தமிழர்கள் பலரின் குறுகிய, மேலான குறிக்கோள்கள் அற்ற வாழ்க்கையின் அபிலாசைகளுக்கு, வித்துவான் வேலன் கொடுக்கும் கிண்டல் மிளிரும் சாட்டைச் சொடுக்கு - சிரிக்க வைக்கும்; சிந்திக்கவும் வைக்கும்.

எல்லாக் கவிதைகளுமே எல்லோராலுமே சுவைக்கமுடியும் என்ற தகுதியை இக்கவிதைத் தொகுப்பு பெறமுடியாதுதான்.

ஞாபகப் பெட்டகத்தில் இருந்து மீட்க முடியாமையால், வரிகள் விட்டுப் போனமையல், சில கவிதைகளின் முழுத்தாக்கத்தையும் உணர முடியவில்லைதான்.

சில கவிதைகளை நீக்கியும், சிலவற்றை நீட்டியும், தொகுப்பைக் கனமாக்கி, காத்திரமானதாகச் சீர்படுத்திச் செழுமைப்படுத்தியிருக்கலாந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், அனைத்துக் கவிதைகளுமே, சாதாரண தமிழ் அறிவு கொண்டவர்களாலும் புரிந்து கொள்ளக்கூடிய, இலகுவான வார்த்தைப் பிரயோகங்களால், இலகுவான அமைப்புகளால், அதே சமயம் கவிதை இலக்கண மரபுகளை இழக்காதவையாக, கருத்தாழம் மிக்கவையாக பின்னப்பட்டவையே!

ஆசிரியரின் கவிதை ஆற்றலை, அறிவை, அனுபவத்தை, தர்மாவேசத்தை, பார்வையின் தீட்சண்யத்தை, இக்கவிதைத் தொகுப்பு துல்லியமாக்க் காட்டுகிறது.

வித்துவான் வேலன் என்ற தமிழ் அறிஞனை, ஆசானை, அரசியல் நோக்காளனை, ஆன்மீகவாதியை, சிந்தனையாளனை, மானுடனை, ஓரளவு பார்க்கக்கூடிய இன்னொரு யன்னலாகவே இக்கவிதைத் தொகுப்பைக் கொள்ளலாம்.

ஆனால், அவரது எல்லை, இது இல்லை என்பது தெளிவு.

அ. சிவபாத சுந்தரம்,<br>
**F.C,M.B, F.C.C.A, M.B.I.M.**<br>
இலண்டன்<br>
23.6.2000.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வணக்கம்

ஈழத்துச் சிவயோக சுவாமிகள் ஏற்றிய ஞான விளக்கு என்னும் நூலுக்கு எழுதிய குரு வணக்கம், ஆசிரியர் பண்டிதர் சு. இராசையா, குருநாதர் யோக சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், நல்லைக் கந்தன் ஆகியோரை நினைந்து உருகியது.

**தில்லைநக ரண்ணா மலை வளரு கழகத்**
**திருவோங்கு தமிழ்வித்து வானோங்க நின்ற**
**எல்லையில் குணக்குன்று ரத்னவேல் என்னும்**
**என்னரிய மாணவ என்றென்னை அழைத்துச்**
**சொல்லரிய அன்பாலே துகளறுத்த தேவே**
**சோராது நான்வாழப் பொருள்தந்த கோவே**
**எல்லாமாய் என்னுள்ளே இருக்கின்ற இறையே**
**எப்பவோ முடிந்ததெனும் இயல்பறிந்த ஞானி**

**நல்லூரில் வாழ்கின்ற நாதாந்த நாதா**
**நமக்கென்ன குறையென்ற வேதாந்த வேந்தே**
**செல்லப்பன் அருள்பெற்ற சிவயோக சுவாமி**
**சீர்பாதம் மறவாதசிறி யேன் உரைத்த**
**வெல்லும் தமிழ்மாலை இதுசூடி என்றன்**
**வினைதீர்க்க வேண்டும் வரமொன்று தருக**
**நல்லைப் பதிநின்று நடிக்கின்ற நாதா**
**நான்படும் பாடுநீ யறியாத தொன்றோ.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையாகும் இதர நூல்கள்!

## காதல் கவிதைகள்

| | |
|---|---|
| மறக்கத்தான் நினைக்கிறேன் -கண்ணம்மா | 17.00 |
| (மரபுக் கவிதைகள்) புலவர் தே.ப.சின்னசாமி | 23.00 |
| கவிச்சிதறல் - பாரீஸ் பார்த்தசாரதி | 15.00 |
| அவளுக்கு உயிரென்று பெயர் - க.மு.ஜமீல் | 18.00 |
| உனக்காகவே வாழ்கிறேன் - கவிஞர் பி.குமார் | 15.00 |

## காதல் - வாழ்வியல் கவிதைகள்

| | |
|---|---|
| கலியுக காந்தி - கவிஞர் சின்னசேலம் செந்தில்ராஜா | 21.00 |
| கனவுப் பெண்ணும் கவிதைப் பட்டும்-ஜோசப் குமார் | 20.00 |
| மலரத் துடிக்கும் அரும்புகள்-பெ.பரிமளசேகர் | 20.00 |
| ஒரு ஜீவ நதியின் தாகம் - ஏரல் ராஜன் | 18.00 |
| என்னைத் தொலைத்துவிட்டு-அரசு இளமாறன் | 18.00 |
| காகித அம்புகள் - க. சிவகரன் | 20.00 |
| நெகிழாதோ மனமே - சவேதா | 18.00 |
| ஒரு குயிலின் குரல் - புலவர் தமிழ்வேலனார் | 33.00 |
| விடியலைத் தேடும் சிறகுகள் - பிரதாபன் | 24.00 |
| நனைந்த நந்தவனம் - சிங்கி | 27.00 |
| மனுஷ்ய புத்திரனின் கவிதைகள்-மனுஷ்யபுத்திரன் | 6.50 |
| ஒரு சிறைச்சாலை விடுதலையாகிறது-ஆர் ஹரிஹரன் | 24.00 |
| சிறகுகள் - பொன்ஸ் | 23.00 |
| பூபாளக் கவிதைகள் - பவானிதாசன் | 20.00 |
| வெற்றியின் வேர்கள் -வெ.தமிழமுதன் | 13.00 |

## காதல் - தேசநலக் கவிதைகள்

| | |
|---|---|
| ஒரு நிலவும் சில நட்சத்திரங்களும்-இ.சாகுல் அமீது | 18.00 |
| பேசாதிரு மனமே - கிருஷ்ணா | 14.00 |
| விடியலுக்கொரு கடிதம் - கங்கை ஆறுமுகம் | 18.00 |
| வாழ்ந்து காட்டுவோம் வா - ஆ.அழகேசன் | 24.00 |
| மலரின் யாத்திரை - கவிஞர் பெ. மணிவண்ணன் | 25.00 |

## தேசநலக் கவிதைகள்

| | |
|---|---|
| தேசமே தெய்வமாய் - கவிஞர் நெல்லை நிலவன் | 15.00 |
| இந்தியன் என பெருமைப்படுகிறேன்- சிவராஜ் | 18.00 |
| பிறர்க்கென வாழ்ந்த பெரியவர்கள்-தே.ப.சின்னசாமி | 27.00 |
| பாடும் பறவை - பாவலர் கருமலைப் பழம்நீ | 18.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருக,
# தமிழர் பொற்காலம்



## முதற் கவிதை

தந்தையை இழந்தபின் தமையனான வைத்திய கலா நிதியின் தயவில் கொழும்பு மாநகருக்குப் படிக்கச் சென்றவன், நரக வாழ்க்கை தாங்காது வீட்டைவிட்டு ஒருவருமறியாமல் புறப்படுமுன் வானொலிப் பெட்டியின் மேல் எழுதி வைத்த கவிதை.

**"கான்கூட்டிப் பிழைக்கலாம் கக்கூசும் கழுவலாம்**
**வான்தோயும் நெடுமதில்சூழ் வளநகராம் கொழும்புதனில்**
**நான்சென்று நலிந்து நின்று நன்மைபல சொல்ல இவ்**
**ஊன்தன்னை வளர்த்திடலாம் உனக்கடிமை செய்யாதே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீட்டுக்கவி

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்படிக்கச் சென்ற இவனுக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் படித்தால் ரூ 1000/- பொற்கிழி பெறலாம் எனச் சொல்லினர். பேராசிரியர் தெ.பொ.மீ, கி.வா.ஜ போன்றோர் அதனைப் பெற்றனர் எனவும் ஆசை காட்டினர்.

திருவையாற்று அரசினர் கல்லூரி மேலாளர் பட்டுக்கோட்டை, திரு. நாடிமுத்துப்பிள்ளையின் தயவு வேண்டுமென்றனர். தஞ்சாவூருக்குப் புறப்பட்டான். சென்னை சென்ற பிள்ளையைக் காத்துத் தஞ்சைப் புகைவண்டி நிலையத்தில் தஞ்சமடைந்தான். அருகில் உள்ள மாளிகையில் தங்குவாரென அறிந்தபின் சென்றபோது மாளிகை வாசலில் பெருங்கூட்டம். சேவகரின் தர்பார் ஒரு புறம். அவரைக்காணக் கைகொடுத்தது இந்தச்சீட்டுக் கவி. இது இரண்டாவது கவிதை.

**"பாடும் புலவனல்லன் பரிசில் பெறு மொருவலன்லன்**
**நாடும் கலைபயில வந்தவனே - நாடு புகழ்**
**நாடிமுத்துப் பிள்ளைநின்னை நான்காண வந்துதினம்**
**நீடிரண் டாகுதை யா.**

காந்தியடிகளைச் சென்னையில் முதன்முதலாகக் கண்ட காட்சியை வடித்த கவிதையும், விழலானந்த அடிகள் மறைவு கேட்டுப் பாடிய அஞ்சலியும், சுண்ணாகம் ஈழ கேசரியில் வெளிவந்தன. ஆனால், இன்று நினைவிலும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரனுக்கு வாழ்த்து

பேரனுக்குப் பிறந்தநாள். வயது ஐந்து. சில வரிகளே நினைவில். பேரன் பிறக்கும்போது அவன் தாய்க்கு வயது 18. அந்த வயதில் கவிதையைக் கேட்டுக் கண்கலங்கிய அவன், பின்னாளில், "ஈழத்துப் போராளி எதிர்நோக்கும் மரணங்கள்" என்னும் கவிதையை எழுதினான்.

"அஞ்சி அஞ்சி என்றன் அருமை மகள் தன்னைப்
பிஞ்சில் கனிவித்ததும் அவள் பேறுகாலம் வந்தென்
நெஞ்சம் மிகக் கனத்ததும்,
கஞ்சம் மலர்ந்த இருட்கங்குல் கிழித்தகதிர்க்
குஞ்சு நிகர்த்த குமரா நீவந்து புவியுதித்ததும்.

# மங்கை நீ வாழ்க, வாழ்க!

கல்வியின் உயர்வுகேட்டுக் களித்தஎன் உள்ளம்
பின்னர் உன்றன் கதையினைப் படித்தபோது
எல்லையில் மகிழ்ச்சி உந்த என்னையே மறந்துவிட்டேன்
இலட்சியம் இதுவேயென்று இளமையில் புரிந்துகொண்ட
வில்விநீ பள்ளிதன்னில் வித்தகம் காட்டிப்பெற்ற
பரிசினைப்படத்திற் கண்டு பரவச மடைந்தேன்
செல்விநீ பேதையல்லை பெதும்பையுமலை இன்று
பெட்புறு மங்கையான மலர்தலைக் கேட்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிலா இன்பத்தாலே அம்மம்மா அதிர்ந்த போனார்
ஆரெதிர் வந்தபோதும் அவர்க்கெலாம் எடுத்துச் சொன்னார்
உளமெலாம் உருகிப்போனார், ஓடினார் கந்த கோட்டம்
உனக்கொரு பூசைசெய்தார் உம்பர்கோன் அருளவேண்டி
தளர்விலா மூத்ததாத்தா சாம்பவிக் குஞ்சைப் பெற்ற
தாயினைத் தந்தைதன்னைத் தமையனை நினைத்தேன்
இளமையைத் திரும்பப் பெற்றேன் எதிரினில் உன்னைக் கண்டு
இருகணால் பருகியென்றன் இதயத்தால்
அணைத்துக் கொண்டேன்.

★

## மாணவனுக்கு ஒரு கவிதை

அன்பான மாணவன் அருமை நாயகன் பிரிவு குறித்தது.

பட்டறிவும் படித்தறிவும் பாரெல்லாம் சுற்றி நாம்
கெட்டறிந்த கேடுகளும் கேளாத செவிடர்களாய்த்
துட்டனிவனென்று தூற்றிட நாம் வாழ்ந்த கதை
கெட்டழிய வேண்டாமோ கேடுகெட்ட கலைஞர்களே.

கலப்படமே காலத்தின் கோல மெனும்
நிலைப்பாட்டை நிதர்சனத்தை நீகண்டு தெளியாது
கலைப்படமே படமென்று நீகண்ட கனவெல்லாம்
விலைப்படா தையா விண்ணுலகு சென்றவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தவும் படித்தவர்கள் மேதைகள் என்று தம்மை
வித்தகம் செய்து வீணே வீழ்ந்தவர் கோடி கோடி
தத்துவம் உணர்ந்தவன்நீ தன்னையே உணர்ந்தவன்நீ
செத்துநீ கிடந்ததென்ன சிரித்திட வாழ்ந்த தென்ன

வாழும் தகுதி யெல்லாம் வள்ளல் உனக்களித்தும்
வாழாத வாழ்க்கை இதுவென்று காட்டிவிட்டாய்
தோழாநீ காலத்தை வெல்வாய் கலைபடைப்பாயென்றிருந்த
ஞாலத்தை ஏன்விட்டாய் நாளைக்கு என் வைத்தாய்!

தத்துவம் உணர்ந்ததாலே சங்கடம் தீர்ந்து போச்சு
நித்திரை கொள்வ தொத்த நீள்துயில் தன்னை
பித்தர்வாழ் உலகத்தோர்கள் பிரித்தறிய மாட்டாமல்
செத்தவரென்று சொல்லும் செய்கையை உணரலாச்சு.

ஆச்சியை நினைப்பேன் அப்புவை நினைப்பேன்
அந்த ஆண்டவன் யேசுவை நினைப்பேன்
செந்தமிழ்க் கந்தவேளை நினைத்தபின் நினைப்பேன்
உன்தனை ஐயா நித்தம்நித்த மென் றழுதாயன்று.

முந்திப் பிறந்தாய் முதிரா அறிவினால்
நிந்திக்கப்பட்டாய் நினைப்பவர் நெஞ்சினுள்ளே
வந்திக்கப் படுவாய் வருவாய் என் நெஞ்சைச்
சிந்திக்க வைத்தாயென் அருமை நாயகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்து சிறுகதை மூலவன்
# சம்பந்தனுக்கு

நான் சொல்லும் தமிழ்கேட்டு
நட்புரிமை பூண்டவனே
தேன்போலும் செந்தமிழால்
சிறுகதைகள் பலதந்து
சான்றோன் என வாழ்ந்த
சம்பந்தன் ஐயாவே
வான்தேடி ஏன் சென்றாய்
வரலாறு படைத்தவனே!

# சீலமுணரும் திறம்

கொழும்பில் நடைபெற்ற திருமந்திர மாநாட்டில் திருமந்திரம் இரண்டாம் தந்திரம் பற்றிய ஆய்வுரையின் நிறைவாகப் பாடப்பெற அவையடக்கம்

மூலனாகிய முதல்வன் அருள் மொழிச்
சீல முணர்ந்த சியாம சங்கரச்
சாமி யாகிய சற்குரு நற்பதம்
ஈழ முய்ய ஏத்துவன் சிந்தையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ன வர்ஒரு நாளென் அகத்திலே
இன்ன ருள்தர எழுந்தருள் போதிலே
சொன்ன வாசகத் தூமொழி இவ்வுரை
பன்ன லானது பழியெனக் கில்லையே.

கோல மொன்றும் கொள்ளாக் குருபரன்
ஈழ முய்ய எழுந்த என்னிறை
ஞால முய்ய நற்சிந்தனை தந்தவன்
ஏல வேயென் உள்ளம் புகுந்தவன்.

மூல னுரைசெய் மந்திர வாசகச்
சீலமுணரும் திறமெனக் கில்லையால்
கால னெனைக்கொடு போகா முனமிந்த
வேல னுரைசெய் விளக்கம் முற்றுமே.

# காலன் வந்தான் கணக்குச் சரியென்றான்

நண்பர் இறந்துவிட்டார். இறுதிச்சடங்கின் போது அவர் மனைவியின் சோகத்தில் பிறந்தவை இவை. பல வரிகள் நினைவிலில்லை.

ஆங்கிலப் பேராசிரியர் இருவர் அஞ்சல்மலரில் படித்து விட்டுப் பாராட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தத்தில் வைத்த செல்வியவள்
சுற்றிச் சுழன்று சோகமே உருவானாள்
கத்திக் கதறிக் கணவன்மேல் வீழாத
பக்தி நிலைகண்டு பதறிற்று என் நெஞ்சம்
"..................................................................................
காலன் வந்தான் கணக்குச் சரியென்றான்
வேலன் நான் என்ன செய்வேன் விதியென்று வீடுவந்தேன்."

## புலவனுக்குப் பொன்விழா

புலவ! சிவானந்த! பொறியியற் புலமையாள!
நிலவொளி யெனக்குளிர் கவிதை பொழிந்து நீ
குலவிடக் கூட்டிய விருந்திது புதுமையே
நலமுறு மனையொடு நலமுற வாழ்கநீ!

நல்ல தமிழ்ப்புலவன் நாடறிந்த நற்றமிழன்
வெல்லத் தமிழ்க்கவிக்கு வேந்தனாய் வாழ்ந்த மகான்
நல்ல தம்பி பெற்றமகன் நான் விரும்பும் தமிழ்நெஞ்சே
வெல்லும் தமிழ்நீ வேருக்கு நீரேநீ வாழ்கவாழ்க!

உள்ளொன்று புறமொன்றாய் உறவாடும் உலகில்நீ
கள்ளமறியாய் கவியறிவாய் கதிரொளியை முகில் மறைக்கும்
வெள்ளத்தை அணைதடுக்கும் வீழ்ந்தா போகும்
உள்ளத்தால் வாழ்கின்றாய் உலகையே வெல்வாய் நீ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தால் உலகத்தைப் பார்க்கின்றாய் நீ
உள்ளத்தால் உலகத்தைக் கேட்கின்றாய் நீ
உள்ளத்தால் உலகோடு வாழ்கின்றாய் நீ
கள்ளத்தார் ஈதறியார் கடவுட் காட்சி.

நெஞ்சில் உதிப்பதை உரைக்கின்றாய்
வஞ்சப் புகழ்ச்சியை வெறுக்கின்றாய்
தஞ்சம் தமிழென நினைக்கின்றாய்
பஞ்சைத் தமிழனுக்காய் உழைக்கின்றாய்

தாயைப் பிரிந்தோம் தாய்நாட்டைப் பிரிந்தோம்
பேயைப் போலலைந்து பிறநாட்டிற் கையேந்தி
வாயைப் பெரிதாக்கி வயிற்றை நிரப்புகின்றோம்
தீயிற் புகுந்தெமக்காய் தியாகங்கள் புரிகின்றார்.

பொன் விழாக்காணும் புலவ நீ வாழ்க
பொன்போலும் மனைபெற்றோய் பொலிந்துநீ வாழ்க
என்போலும் நன்நெஞ்சம் எந்நாளும் நின்பக்கல்
பொன்போல ஒளிவீச மேகமாய் வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதன் குமாருக்கு

மாநிலத்தின் அஞ்சலிகள். குமார் பொன்னம்பலத்தைப் புரிந்து கொள்ளாதவர்க்கும், அவரைப் படுகொலை செய்தவர்கள் புரிய வைத்துவிட்டார்கள்.

அன்னாரை, அவன் 1944ஆம் ஆண்டளவிலேயே புரிந்துகொண்டான்.

சிங்கத்தை அதன் குகையில் சந்தித்தவனுக்குக்குள்ள நரிகளின் குயுக்தி புரியவில்லை. கையறுநிலையில் எழுந்த கவிதைகள்.

# மாமனிதன் குமாருக்கு மாநிலத்தின் அஞ்சலிகள்!

தீரத்தைத் துணிவைக் கொண்டு
தீமையை அடித்து வீழ்த்தியெம்
பாரத்தைச் சுமந்த தோளைப்
பாடையிற் சுமந்தோம் நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரத்தால் வீழ்ந்துவிட்ட வேங்கையே
விதிக்கொரு விதியாய் நெஞ்சின்
ஈரத்தால் இனத்தைக் காத்து
இறுதியில் உயிரும் ஈந்தாய்

புத்தனும் செத்துப்போனான்
போதிமா நிழலிற் பூத்த
சத்தியம் சமாதி யாச்சு
சான்றோரும் கண்ணைமூடி
நித்திரை கொள்ள லானார்
நீதிதே வதையும் கண்ணைப்
பொத்தியே கதறு கின்றாள்
காலனும் கலங்கிப் போனான்.

தமிழினத்தை உயர்த்த வென வந்தவந்த தலைவர்
தமிழினத்தின் பேர் சொல்லித் தம்வயிற்றை வளர்த்தார்
தமிழினத்தை ஏமாற்றித் தம்புகழை வளர்த்தார்
தமிழினத்தின் தாழ்வினிலே தமைவளர்த்துக் கொண்டாரே.

சிங்கத்தை அதன்குகையிற் சந்தித்த வேங்கை
சிறுநரியின் குள்ளத்தால் சிந்திவிட்ட இரத்தம்
வங்கத்தின் கடலையாய் ஆர்ப்பரித்து, நாளை
வரலாறு படைக்குமிதை வருங்கால முணர்த்தும்
தங்கத்தை உருக்கித்தான் தரமுயர்த்த வேண்டும்
தமிழனையும் உதைத்துத்தான் தலைநிமிர்த்த வேண்டும்
சங்கத்தை வைத்தாண்ட தமிழ்ச்சாதி தன்னைத்
தரமுயர்த்தத் தன்னுயிரை அர்ப்பணித்தான் மேதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாகக் கேட்டார்கள் உரிமை தன்னை
அறவழியிற் போராட்டம் நடத்திக் கேட்டார்
தென்பாலில் வாழுகின்ற சோத ரர்க்குச்
செய்தியிது புரியவில்லை, செருவே என்றார்
முன்பாலில் செய்தவினை மூண்டதுவோ என்ன
மூவினமும் போர்த்தீயில் மூழ்கக்கண்டீர்
நன்பாலில் விஷம் கலந்தீர், நாசம் செய்தீர்
நாடெல்லாம் சுடுகாடாய் எரியச் செய்தீர்.

வந்தேறு குடியென்றீர், வரலாறு தெரியாமல்
வாய்காவா உரையாலே வருந்தச் செய்தீர்
சந்தேகம் கொண்டோரைச் சிறையி லிட்டீர்
சதிசெய்து கொலையும் செய்தீர், சத்தியத்தை
நிந்தித்தீர், நீதிக்குக் குரல் கொடுத்த நெடுமரத்தை,
நிமிர்ந்துநின்ற தனிமரத்தை நிலத்திற் சாய்த்தீர்
அந்தோ, அந்தோவென்று அல்லற்பட்டு ஆற்றாது
அழுத கண்ணீர் அம்மாநின் ஆட்சியினை
ஆடச் செய்யும்
கற்புள்ள மகளிர் சொரி கண்ணீர் வெள்ளம்,
கருணையுள்ள இளைஞர் சொரி செந்நீர் வெள்ளம்,
நற்றவைத்துச் சான்றோர்கள் நெஞ்சம் வெந்து
நெட்டுயர்க்கும் அனலான மூச்சின் வெள்ளம்,
அற்பமல்ல அம்மாநின் ஆட்சி தன்னில்
அறியார்கள் சொகுசாக வாழ்வோர் துன்பம்
அற்புதங்கள் நிகழுதற்குக் காலம் வந்தால்
அநீதியே நீதியாய் ஆட்சிசெய்யும், ஆட்சிவீழும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதி தருமத்தைப் போதிக்கும் திருக்கூட்டம், புத்தி
பேதலித்துப் போர்க்களத்தில் நிற்கக் கண்டோம்
நீதியை நிலைநாட்டு மெனநினைத்த கற்றோர் கூட்டம்
சாதியைப் பேசிச் சரித்திரம் மாற்றக்கண்டோம்
ஊதியம் ஏதுமின்றி உலகெலாம் சுற்றிச்சுற்றி
நீதியைச்சொன்ன எங்கள் நிழல்தருமரத்தைப்
பாதியிற் சாய்த்துவிட்டீர், பழியினைச் சுமந்து கொண்டீர்.

நீதியை எடுத்துச் சொல்லி நியாயத்தைக் கேட்டதன்றிச்
சாதியை எடுத்துச் சொல்லித் தர்மத்தைக் கொஞ்சமேனும்
பாதிக்கப் பார்த்த துண்டோ? பணத்தினைப் பதவிதன்னைச்
சேர்த்திட எண்ணினானோ? செய்பிழை என்ன கண்டீர்!

ஆரென்ன சொன்னாலும் சொல்லட்டும், தமிழீழப்
போர் ஏனென்று எதற்கென்று பொழுதெல்லாம் நினைவாக
ஊரறிய உலகறிய ஒலித்தகுரல் ஓயாது
குமார் இறக்கவில்லை குரைகடல் ஓய்வதில்லை

தத்துவம் உணர்ந்த தாலே
சாவினை உணர்ந்து கொண்டோம்
நித்திரை கொள்ளு கின்றான்
நீண்ட நாள் உழைப்பின் பின்னர்
கத்தியேன் குழப்பு கின்றீர்
காலத்தை வெல்ல மாட்டோம்
சத்தியமே, வேலினிது சொல்லுகின்றேன்
சாகவில்லை, குமாருக்குச் சாவேயில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருக தமிழர் பொற்காலம்

கனவு பலித்திட வேண்டும்-பராசக்தி
கனவு பலித்திட வேண்டும்-பொற்காலக்
கனவு பலித்திட வேண்டும்.

வானம் கைப்பட வேண்டும்-தாயே
வானம் கைப்பட வேண்டும்-இந்த
மானிலம் பயனுற வேண்டும்.

கூனற் பிறைக் கடவுள்-தமிழ்க்
கூத்தின் முதற் கடவுள்
ஆனை முகக் கடவுள்
அள்ளித் தரும் கடவுள்

சேனை முகத்தினிலே-செரு
வென்று களிக்கையிலே
தேனைக் குழைத்த வள்ளி-தெய்வ
யானை யுடனே வந்து
வானின் மழையாக-மயிலில்
ஏறி வருவாயே.

பொற்காலக் கனவுகண்ட புலவோர்கள் பலரப்பா
பொய்க்கடிமை இல்லாத புலவரப்பா
கற்காலம் தொடங்கி நாம் வாழும் இக்கால
எல்லை வரை எழுதி வைத்த ஏடுகளோ கோடியப்பா!
நற்காலம் வரவே யில்லை, ஏனில்லை? என்றெண்ணிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவில்லை பழங்கணக்கு பசிக்குதவப் போவதில்லை.
தற்காலத் தமிழர்களே அறியச் சொல்வேன்
தந்தையரின் கனவை நீர் அறியச் சொல்வேன்!

கபிலனொடு பரணனுமே கண்ட பொற்காலம்!
கணியனொடு நக்கீரன் நவின்ற பொற்காலம்!
செவியுறவே செந்தமிழால் ஔவை சொன்னாள்
சீர்பெறவே வள்ளுவரும் இளங்கோவும் சொன்னார்
நவைதீரத் தொல் காப்பியமாய்க் கனவு கண்டான்
நாடறிந்த நம்புலவன் கம்பன் கண்டான்
சுவையூட்டிக் கவி சொன்ன பாரதியும் சொன்னான்
கனவு பலித்திட வேண்டும்; இந்த வானம் வசப்பட வேண்டும்.

பொற்காலக் கனவு கண்ட
புலவோர்கள் வரிசையிலே நானும் வந்தேன்
முற்காலம் உணர்ந்த முனி,
யேசு வெனும் ஞானி, தெய்வீகப்
பொற்காலம் புவி வரவே பொன்னுடலைப்
புண்ணாக்கி மண்ணுக் கீந்தான்
பிற்காலம் வந்துள்ள பிளேட்டோவும்
ரூசோவும் கார்ல் மாக்சும்
கற்கால மாந்தருக்குப் பொற்காலம்
வருகவெனக் கனவு கண்டார்.

தற்காலத் தமிழ்க் கவியாம் பாரதியும்
கலிவீழ்ந்து கிருதயுகக் கனவு கண்டான்
கற்பனையும் கனவுகளும் கறிக்குதவப் போவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவினிலே கண்டுவிட்ட கானல் நீரே
சிற்பமாய் வடித்தாலும் சிலை சிலையே
சிரித்து நாம் உறவாடப் போவதில்லை
சொற்பமாய் இனியேனும் பேசிக்காட்டு
சொன்னவற்றை இனியேனும் செயலிற்காட்டு

அரக்கரை அழித்துத் தெய்வ ஆட்சியை அமைக்கத்
தெய்வ அவதார அதிசயங்கள் ஆயிரமா மிந்நாட்டில்
பரக்க பரக்கப் பஞ்சமும் பசியும் வருத்திட வருந்திப்
பதறிய குரலேயன்றிப் பாவலர் பாடக்காணோம்
தரித்திரம் தீர்ந்து தமிழினம்
பொற்காலம் பொலிந்து தோன்றிப்
புவியெலாம் வாழ வைத்துத்
தாமும் புகழுடன் வாழ்ந்ததாகச்
சரித்திரம் படைப்போம் வாரீர்,
சண்டையைச் சழக்கை நீக்கிச்
சரித்திரம் படைப்போம் வாரீர்,
சாவினைத் துடைப்போம் வாரீர்!

பொற்காலம் தமிழர்க்குக் காண வேண்டில்
புகல்வதைநீர் பொறுமையாய்க் கேட்க வேண்டும்
புரிந்துகொண்டு செயற்பட நீர் முயல வேண்டும்
கற்றவர்கள் நாமென்னும் தலைக்கனத்தி னாலே
மற்றவரின் குற்றத்தைத் தூற்றித் தூற்றிச்
சுற்றத்தைக் கூடத் துரத்தி விட்டோமே
குற்றத்தைப் பார்த்தோம் குணம் பார்க்கத் தவறி விட்டோம்
கூடி நாம் வாழாமல் கோடி பல இழந்து விட்டோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவரைப் பாருங்கள் மகமதியரைப் பாருங்கள்
மாநில மெங்குமவர் மக்காவைப் பரப்பி விட்டார்.

கருவாடாய்க் கன்னியர்கள் கண்கலங்கி நிற்கின்றார்
கைபிடித்து வாழ்வளிக்கக் காளையர்கள் துணிந்ததுண்டோ?
உருக்குலைந்து மாடாக உழைக்கின்ற உழவர்கள்
உயர்வதற்கு நாமேதும் உருப்படியாய்ச் செய்ததுண்டோ?
வருத்தி உடலாலே வாழ்வெல்லாம் உழைக்கின்ற
வறியோரைச் சாதியெனும் சவுக்கால் அடித்தோமே
திருத்தி அவர்வாழ்விற் செம்மைபெற ஏதேனும்
சின்ன அளவேனும் சேவைசெய்ய வந்ததுண்டோ?

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடியென்று தமிழ்க் குடியை
எல்லாரும் சொன்னாலும் இன்றுவரை ஓரினமாய்
இனவுணர்வின் ஓரினமாய் இருக்கின்றோமா
எல்லார்க்கு மிங்கே இடங்கொடுத்தோம் ஏற்றமிகு
நாடிழந்தோம் வாழ்விழந்தோம் நல்ல தமிழ் இழந்தோம்
எல்லா மிருந்தும் ஏதுமில்லா ஓரினமாய்
வந்தேறு குடியென்னும் வசை பெற்றே வாழ்கின்றோமே!

இனவுணர்வாய் வாழ்கின்றார் இஸ்லாமியர்கள்
இந்தியரும் அவ்விதமே எண்ணுகின்றார்
சனத்தொகையில் உயர்வான சிங்களவர் தாமும்
சலியாமல் பேரினத்தில் பெருமை கொண்டார்
இனக் கலகம் எத்தனையோ வந்த போதும்
இழிவாகப் பேசியெமை உதைத்த போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தை விலைபேசி இழிவாக விற்கின்ற
உலுத்தர் உள்ளவரை உயர்வுக்கு வழியேது.

ஐந்திணை நிலமும் அருவியோடாறும்
அழகிய கானக எழிலும்
அலைகடல் வளமும் அழகிய மலைதரு
வளமும் அஞ்சனம் பூசிய
பந்தினை ஒத்த பனைதரு கனியும்
பலாக்கனி கீறிய சுளையும்
பருகிடக் கள்ளும் பாடியாடிட நீள்வயற்
பரப்பும் பால்தரு நிலவும்
கொஞ்சமும் குறையா ஈழநன்னாட்டின்
குடிகளாய்ப் பிறந்திடப் பெற்றோம்
குறுமதியாலே வாழ்வினை இழந்து
குற்றுயிராய் வாழுகின்றோமே
தந்தகைக் கொண்டு சஞ்சலம் தீர்த்துச்
சரித்திரம் படைத்திட மறந்தோம்
சகமெலாம் சென்று அகதியாய்நின்று
அலைந்திடும் பழியினைப் பெற்றோம்!

ஈழத்தமிழர்க்கு இனியதொரு பொற்காலம்
தூரத்தி லில்லை துணிவோடு சொல்கின்றேன்
வேழத்தை வீழ்த்தி விடியலை நோக்கியெழும்
வேங்கை களின்போ ராட்ட வேகத்தால்
ஈழம் மலரும்; இனிய பொற்காலம், மலரும்
என்றாலும் எட்டப்பர் கூட்டம் ஏமாற்றிச்
சூழல் கெடுத்துச் சூழ்ச்சி பல செய்யும்
சுதந்திரத்தின் சுகமெல்லாம் சோதனைக்கு ஆளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளும் இளைஞர்க்கு நல்லறிவு கொளுத்துதற்கு
நாலும் தெரிந்த நல்லறிஞர் குழுவமைத்து
ஏடாம் திருக்குறளின் இயல்புணர்ந்த சான்றோரின்
எண்ணத்தை வித்தாக்கி எழிலான பொற்கால
மாடத்தைக் கட்டி மணிஈழத் திருநாட்டில்
மங்கையரும் ஆடவரும் மகிழ்ந்துலவும் பொற்காலம்
பாடலோடு ஆடல் பயின்று வரும் பொற்காலம்
பசியற்று மக்கட் பண்புயர்ந்த பொற்காலம்

சாதி சமயச் சழக்கில்லா ஈழத்தில்
நீதியிலே ஆட்சி நிமிர்ந்து நிற்க நீர் காண்பீர்
ஊதியமும் உழைப்பும் ஊக்குவிப்புத் திட்டங்களும்
நீதியடிப்படையில் நிச்சயிக்கப் பட்டுவிடும்.

ஏன் தமிழில்? எவை தமிழில்? எல்லாம் தமிழில்.
ஏற்றமிகு தமிழ்மொழியே கல்விமொழி; எண்ணத்தைத்
தேன்தமிழில் ஊட்டிடுவோம்; தெய்வத்தைப் பரவிடுவோம்;
தேர்ந்தெடுத்துப் பன்மொழியும் பல்கலையும் பயின்றிடுவோம்
சான்றாண்மை கொண்டே உலகினைத் தழுவிச்
சமரச சன்மார்க் தர்மம் வளர்ப்போம்
கூன்தான் விழுந்து முதுகு கூனியே போனாலும்
கும்பிட்டு வாழ்ந்து எம் குலத்தினைக் கெடுத்திடோம்!

புத்தாயிர மாண்டில் பொற்காலம் ஈழத்தில்
பூப்பது நிச்சயம் புறப்படு என் தோழா,
பத்தாயிர மாயிரமாய்ப் பவுன்களைச் சேர்த்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவமாய் ஆங்கிலமொழியைப்
பாசையாய்க் கொண்டபோதும்
சத்தியமாகச் சொல்கின்றேன் தம்பி சரித்திரம் மாறுவதுண்மை
சர்வதேச அரசியற் தலைமையைத்
தமிழினம் பெறுவதுமுண்மை
நித்திரை விழித்துநீ விடியலை நோக்கிடு விரையுது பொற்காலம்
விரிகதிர்ச் சூரியன் பொற்கதிர் வீசினன் பொலிந்தது பொற்காலம்

பொற்காலம் வருகவெனக் கவிதருக என்றார்க்கு
சொற்கோத்த சீர் பலவாய்ச் சீர்கொண்ட அடிபலவாய்
நற்கவிதை பதினைந்து நாலுவரிப் பாடலிது
முற்கவிதை தேவபாணி, முறைநீக்கி ஏற்றருள்க.

## அருண் பிரசாந்திக்கு

அன்பான வாழ்த்துக்கள்!

முருகன் அருளையும், வள்ளுவர்கண்ட காமத்துப்பாலினையும் உணர்ந்து தெய்வம்பராவிய திருமண வாழ்த்து.

இருள் கிழித்தெழு ஞாயிறு இவனென
எந்தை முருகன் அருட்திறன் இதுவென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி யுள்ளம் களித்திடப் பிறந்தனை
காலவெள்ளச் சுழியில் எத்தனை!
மருள் வயப்பட்டு மாய்ந்திடா உன்தனை
மங்கை வள்ளி கணவன் காத்தனன்
அருண, இன்றுநீ அப்பன் அருளினால்
அன்புச் சாந்தியை அணையப் பெற்றனை!

வழங்கி வழங்கியுன் வாழ்க்கை முழுவதும்
வள்ளல் முருகன் பன்னிரு கைகளால்
உளங்களித்துநீ உயர்வுகள் பெற்றிட
உனக்களித்த உதவிகள் எத்தனை!
விழுங்கிடாதுநீ விக்கிய போதெல்லாம்
வினைகடிந்த வேளைகள் எத்தனை!
தழும்பிடாது உன் வாழ்க்கை சிறந்திடத்
தந்தனன் ஒரு வாழ்க்கைத் துணையினை!

தாத்தா அம்மம்மா செய்த தவப்பயன்
தந்தையும் தாயும் தங்கையும் செய்பயன்
மூத்தோர் எங்குடி செய்த முழுப்பயன்
முழுது முண்மை எப்பவோ முடிந்தது
நீத்தார் கூறிய செய்தி இது தம்பி,
நீயும் நானும் நினைத்திருந் தோமா
சாத்திரம் பார்த்துச் சடங்குகள் செய்துநீ
சாந்தியைப் பெற்றாய்; பிரசாந்தியைப் பெற்றாய்

இளமை காத்தனை இதுவரை காலமும்
இல்லறத்துக் கொருசாந்தியைப் பெற்றனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமை மாறி ஏந்திழை தளர்ந்துடல்
முதுமை யுற்றவள் முகமலர் வாடினும்
வளமை மாறி வறுமைவந் துங்களின்
வாழ்வைப் புயலிடிமின்னிக் கெடுக்கினும்
உளம்கலந்திடும் உள்ளப் புணர்ச்சியும்
உயிர்கலந்திடும் உயிருறு புணர்ச்சியும்
துளங்கி வாழ்ந்திடத் தூய என் உள்ளத்தால்
தூர இருந்தும் தாத்தாநான் வாழ்த்தினேன்.

புத்தி சொல்லி உம்பொன்ன்ன பொழுதினைப்
போரடிக்கும் புன்மதி எனக்கில்லை
நித்திரைவிட்டு விடியலில் எழுந்து நான்
நீள நினைந்து எழுதிய கவியிவை
சித்தம் சிவனிடம் வைத்துக்கொள்ளுங்கள்!
செய்வினைத் தூய்மையைப்
பேணிக்கொள்ளுங்கள்!
சத்தி சிவமாயுமை எண்ணிக்கொள்ளுங்கள்!
சாந்தி, ஓம் சாந்தி, சர்வமும் சாந்தியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவிடை ஆடிய தமிழ்

சுவிஸில் நடந்த இந்துகலாசார மாநாட்டில் பிறந்த கவிதை.

பாவிடை ஆடிய தமிழே-தமிழ்ப்
பண்ணிடைக் கூடிய தமிழே-புலவர்
நாவிடை நடந்தஎன் தாயே-ஞானத்
தமிழினில் தவழ்ந்து வந்தாயே!

தேடிய தேவர்கள் ஒட-உளம்
வாடிய அன்பரைத் தேடி
ஓடிநீ வந்ததும் உண்டு-அவர்
உள்ளத்தில் உறைந்ததும் உண்டு!

ஓங்கிய மலைகளினூடு-தமிழ்
இந்து கலாச்சார மாநாடு
தேம்ஸ்நதி தீரத்திருந்து-உனைத்
தேடிவந்தேன் இங்கு விரைந்து!

பாவிடை யாடிய தமிழே-என்தமிழ்ப்
பாவிடை ஆடவும் வாராய்
நாமார்க்கும் குடியல்ல வென்றான்-இந்த
ஞாலத்தை வெல்லும் தமிழ்தந்தான்-அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் நமக்கின் றிருந்தால்-தமிழ்ச்
சாதி தலைநிமிர்ந்து நிற்கும்-சைவ
மேன்மைத் தமிழ் உலகை ஆளும்

நாமார்க்கும் குடியல்ல, அல்ல-இனி
நரகத்தில் இடர்ப்படலும் இல்லை
தாமார்க்கும் குடியல்லான் தானைத்
தழுவிக் கொண்டார்க்குக் குறையேதுமில்லை!

# கலசம் தந்த சிந்தனை

கலசம் என்னும் சஞ்சிகை லண்டனில் இருந்து வெளிவருகின்றது. அதில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் தூண்டிய சிந்தனையே இந்தக்கவிதைகள். புலம் பெயர்ந்து வாழும் நம்மவரின் இன்றைய நிலை பற்றிய ஒரு பார்வை.

நான்போனால் நான்வருவேன் என்றெடுத்துக்
கலசத்தால் அழுதுவார்த்தீர்
தேன்போலும் தெள்ளுதமிழ்த் தேவாரப்
பக்தி மொழி பகர்ந்தீர்
நான்போகத் தானேஇவ் வுலகில்
நமைப் படைத்த நான்முகனும்
ஊன் படைத்தே அதற்குள்ளே உயிரும் ஊட்டி
உலவிடவே விட்டு வைத்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானாளும் வள்ளுவனும் இவ்வுலகில்
வாசுகியை மணந்து காட்டித்
தேனாளும் திருக்குறளால் திசையளந்தான்
இறுதியில் தெய்வ மானான்
வானாடர் காணாத இன்பவாழ்வை
வாழ்வாங்கு வாழ்ந்துநீர் பெறுக என்றான்
ஆனாலும் என்ன பயன் ஆர் கேட்டார்
அவருரையை அந்தோ! அந்தோ!

கலசத்தால் வார்க்கின்றீர் அமுதபானம்
காசினியோர் கேட்கின்றார் காமகானம்
விலகித்தான் போகின்றார் மனிதரெல்லாம்
வியப்பதற்கோ ஏதுமில்லை விதியின் கோலம்
உலகத்தீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
ஒன்றேதான் பரம்பொருள் ஒன்றேதான் மனிதகுலம்
கலகத்தார் மானிடர்கள் காதால் கேட்பர்
கருத்தினிலே கொளமாட்டார் கடிதினிலே மறப்பார்!

குறிஞ்சி நிலம் இந்த நிலம் குடிப்பதற்கும்
கூடியாடி ஊடுதற்கும் ஏற்றநிலம்
அறிந்ததினால் ஆன்றோர் அன்று கூடலும்
கூடல் நிமித்தமுமே குறிஞ்சி யென்றார்
செறிந்திங்கு வாழுகின்ற செந்தமிழர் தாமும்
சேர்ந்ததன் வண்ணமாய்த் திரிந்து போனார்
அறிந்திட்டேன், என் செய்வேன் ஆச்சரியத்தால்
வாய் பிளந்திட்டேன் இல்லை, இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவினை வென்றவன்

இலங்கைக் கலாசார அமைச்சில் கலைக்களஞ்சியத் தொகுப்பாசிரியானகப் பணிபுரிந்த வேளையில், அமைச்சு, பட்டம், பொன்னாடை பரிசளித்தபோது அவற்றை ஏற்க மறுத்து எழுதிய கவிதை.

அகதி களாகியே தமிழர்கள் அலையவும்
அன்னந்தண்ணி இல்லாதவர் சாகவும்
சகதிகள் சேறுகள் தாண்டி வந்தவர்
தாண்டிக் குளத்திலே செத்து மடியவும்
அகமுமுருகியென் ஆவி கலங்கிட
அரச கௌரவம் யானிதை ஏற்பனோ
சகமு முணர்ந்திடும் சான்றோர் உணர்வரால்
சாவினை வென்றவன் வேலன் அறிவையோ!

# வந்தது வசந்தம்

அம்மை சிறிமாவோவின் ஆட்சிக்காலம் வானொலிக் கவியரங்கும், சில கவிதைகளை ஏற்க மறுத்தது. அதுவே கடைசிக் கவியரங்கமாயிற்று. நினைவில் நின்ற சில கவிதைகளை இவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது வசந்த மென்று
வானொலியார்கள் இங்கு
செந்தமிழ் கொணர்க வென்று
தீட்டிய அஞ்சல் கண்டு
நொந்தனன் சிறிது போழ்து
நோவின்றி மகப்பே றுண்டோ!

சோசலிச வாழ்வென்று சொல்லச் சொல்லிச்
சொகுசான பேர்களுக்கே சொர்க்கம் சொர்க்கம்
நீசர்கள் நடத்துகின்ற நிசவாழ்வென்ன
நித்திரையா கொள்கின்றோம் நாமெல்லோரும்
தாசர்கள் அடிவருடி தாரம் விற்கும்
தமிழர்க்கு எந்நாளும் வசந்த காலம்
கூசவில்லை நானிதனைக் கூறுதற்குக்
கூற்றினையும் எதிர்த்து நிற்பேன் கொள்கைக்காக!

சிங்களஞ்சேர் தென்னிலங்கைத் தென்றற்காற்றே
தேன்போலுமினிய தமிழ் வசந்தக் காற்றே
வங்கம் சேர் வடகடலின் வாடைக் காற்றால்
வளஞ்செறிந்த வடகிழக்குத் தமிழர் நாங்கள்
எங்களது தமிழுணர்வை அடக்கி ஆள
யாராலும் இயலாது உலக மெல்லாம்
சங்கொலியாய் ஊதுங்கள் தமிழர் வீரர்
சரித்திரத்தில் அழியாமல் நிலைத்து நிற்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் சிரித்தேன்?

எந்தையும் தாயும் முன்பு
　　ஏற்றமா யிருந்த போது
சொந்தம்நாம் என்று சொல்லி
　　சுகமெல்லாம் கண்டவர்கள்,
தந்தையை இழந்து நாங்கள்
　　தரித்திரப் பட்டபோது
நிந்தித்த சுடு சொற்கேட்டு
　　நீளநான் சிரித்ததுண்டு!

வஞ்சக மறியாத் தாயை
　　வாயில்லாப் பூச்சிதன்னை
நொந்தவர் பசியைத் தீர்த்துத்
　　தன் நோவினை மறந்த தாயை
சிந்தையில் ஒன்று வைத்துச்
　　சிரித்திட வஞ்சம் செய்யும்
விந்தையாம் மனிதர்கண்டு
　　விலாவிறச் சிரித்ததுண்டு!

கல்வியைப் புகழ்ந்து சொல்வார்
　　கற்று நீ தேறிவிட்டால்
கல்வியால் பயனென்னஎன்பார், நாலு
　　காசல்லோ வேண்டு மென்பார்
கல்வியைக் காசாய்க்கண்டு
　　கடவுளை வணங்கு மிந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லரை எண்ணி எண்ணிப்
புழுங்கிநான் சிரித்ததுண்டு

படித்து நீ பெற்ற பட்டத்தை மடித்துக்கொண்டு
உடுத்து, உணவருந்தி, ஒரு தொழில் கேட்கப் போனால்
படித்த உன்பட்டத்தாலே பயனொன்று மில்லைத் தம்பீ
பிடித்துவா முயற்கொம்பென்ற போதுதான் சிரித்ததுண்டு!
ஊதியம் எதிர்பாராமல் உழைப்பினைச் சொரிந்து
நீதியாய்ப் பணிசெய்வோர்க்கு நியாயமா கிடைக்கும்?
வாதியாய் மாறி வல்லடி வழக்கால் பெற்ற
ஊதியம், உயர்வுகண்டு உரக்க நான் சிரித்ததுண்டு!

பிறர்பழி தூற்ற அஞ்சிப்
பெருந்துயர் வந்த போதும்
அறத்தினை எண்ணி எண்ணி
அடக்கமாய் நின்ற போதும்
மறுத்துரை கூறா என்றன்
மௌனத்தை வஞ்சமென்று
உறுக்கிய உரையைக் கேட்டு
உள்ளுக்குள் சிரித்ததுண்டு!

உள்ளத்தில் தெய்வம் வைத்து
உழைப்பினில் உண்மை வைத்து
வெள்ளமாய்க் கருணை வைத்து
விரகினை விலக்கி வைத்து
கள்ளமாய்க் காதல் செய்யும்
கருத்துறு கடவுட்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்ளியே நகை கொண்டென்னை
இழித்திடச் சிரித்த துண்டு

புத்தகம் சுமந்து நாளும்
புத்தியை இழந்த தன்றி
வித்தகப் பேச்சி னாலே
வீட்டிலே சோறுவேமோ?
வர்த்தக மாக்கு வாழ்வை
வளர்ந்திடும் வழியைப் பாரு
கர்த்தனே, கந்தா என்று
கதறிநான் சிரித்த துண்டு!

ஏணியாய் நின்றாய், பலபேர்
ஏறிட இடங்கொடுத்தாய்
ஏணியில் ஏறிச் சென்றோர்
எட்டியே உதைத்து விட்டார்
ஆணிவேர் மரத்தைத் தாங்க
ஆகாயம் பரவிப் பூத்தல்
காணிரோ என்பார் சொல்லக்
கலங்கிநான் சிரித்ததுண்டு!

அற்பர்கள் போடும் ஆட்டத்தால் சிரித்ததுண்டு
ஆழமின்றி மேடையேறும் அதிசயத்தால் சிரித்ததுண்டு
ஆரவாரக் கவிகேட்டு அதிர்ந்துநான் சிரித்ததுண்டு
சிரித்த துண்டு சிரித்ததுண்டு சிரிப்புக்குள்ளே சிக்குண்டு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் சினந்தேன்

தன்னையே கொல்லும் சினமென்று ஆன்றோர்கள்
முன்னமே மொழிந்தாலும் முழுதும்நான் உணர்ந்தாலும்
என்னை விழுங்கி என் செயலைத் தனதாக்கி
இழுத்து நிலை குலைத்துச்
சின்னவனாக்கும் சினமடங்காக் காரணம்தான்
என்னே? என்னே?

## அரசினைச் சினந்ததுண்டு

ஆட்சியைப் பிடித்துக்கொண்டு
அரியனை ஏறிவிட்டால்
நாட்டினை மறந்து தந்த
வாக்கினை மறந்து விட்டு
கோட்டை போல் வீட்டைக் கட்டி
குடிகளைமறந்து தீய
ஆட்சியில் வீற்றி ருக்கும்
அரசினைச் சினந்த துண்டு!

## பத்திரிகையாளரைச் சினந்ததுண்டு

எழுதுகோல் தெய்வம் இந்த
எழுத்துமே தெய்வம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுதிலாப் புலவன் பாரதி
வழி வந்த பத்திரிகையாளர் இன்று
தொழுது, கோல் தூக்கித் தூக்கித்
தூரவெனச் சான்றோர் தூற்றும்
இழிநிலை கண்டு நெஞ்சம்
இற்றதால் சினந்த துண்டு!

## புத்தி சீவிகளைச் சினந்ததுண்டு

புத்தகம் சுமந்தார், போதனை
பொழிந்தார், இரவும் பகலும்
வித்தகம் பேசிப்பேசி
விரிவுரை பலவும் செய்தார்
சத்திய முணரா இந்தச்
சனக்கரால் ஈழநாடு
யுத்தத்தால் அழியுதையோ
யோக்கிய மற்ற இந்தப்
புத்திசீவிகளைக் கண்டு
பொங்கி நான் சினந்ததுண்டு!

## அந்த இறைவனைச் சினந்ததுண்டு

அறிவினைக் கொண்டும் அகவுணர்வினைக் கொண்டும்
அன்றாட வாழ்க்கை அனுபவங் கொண்டும்
உறுபொருள் ஒன்றுண்டு உணர்கின்றேன் உண்மையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகியல் வாழ்வில் நாளும் உழல்கின்றபோது, நெஞ்சம்
மறுகியே மயக்கங்கொள்ளும், மதியினால் விதியை நோகும்.
மன்னுயிர்க்குயிராம் அந்த மன்னவன் இருப்பைக் கூட
உறவற்று அயர்த்து உள்ளம் வெந்து நான் அழுதபோது
உலகினைப் படைத்த ஒருவனைச் சினந்த துண்டு!

## நிறைவு

தர்மத்தின் ஆவேசத்தால் சாத்திரம்
சடங்கை யெல்லாம் சாடினேன்;
அதர்மத்தை அடித்துவீழ்த்த ஆவேசம்
கொண்டேன்; சாத்வீக அகங்காரக்
கர்மத்தால் போர்கூடப் புனிதப்
போரே புலைத் தொழிலும் புண்ணியமாம்
வர்மத்தை வஞ்சகத்தை விட்டொழிப்போம்
வளமாக எந்நாளும் வாழுவோமே!

## ஏன் அழுதேன்?

தேனூறும் வாசகத்தைப் படித்தழுதேன்
திருக்குறளைப் படித்துநான் அழுவதேனோ?
ஊனுருக என் உயிர் உருக உள்ளம் சோர
உணர்வற்ற நிலை எதனால் அறியேன் நானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்தினைத் தொகுத்துச் சொன்ன
ஆழ்ந்தநற் புல ம கண்டா?
அன்புதான் இல்லறத்தின் ஆணிவேர்;
அன்புதான் அருளுக்கும் அன்னை;
அன்பே அனைத்துலக இயக்கம்;
அன்பே கடவுள்; என்னும்
ஆழத்தை நானுணர்ந்து கொண்டதாலோ?

எடுத்தபொருள் ஒவ்வொன்றாய் எண்ணி எண்ணி
எளிதாகப் பொருள் விளக்கம் செய்து, பின்னர்
தொடுத்து அவற்றின் நன்மை தீமை இவையே என்று
தொகுத் தெடுத்துக் கற்போரின் உள்ளங் கொள்ள,
முடித்துச் சொன்ன முத்தாய்ப்புக் கவியழகைக் கண்டதாலோ?

நிலத்திலே வேர் ஊன்றி நீள்கடலில் முக்குழித்து
நினைவாலே திசையளந்து நீள்வானின் முகில் தழுவும்
புலமைத் திறங்கண்டு புல்லரித்தோ நானழுதேன்?

மாந்தர் இயல் இதுதான், மன்னுயிரின் விதியிதுதான்,
மாடாய் உழைத்தாலும் மனத்தளவே மகிழ்ச்சியெனும்
சாந்திதரும் வாசகத்தின் சாரத்தை உணர்ந்தழுதேன்!

உடலுறு புணர்ச்சி யன்றி உறுபொருள் காணா மண்ணில்
உள்ளுறு புணர்ச்சி காட்டி உயிருறு புணர்ச்சி கூட்டிக்
கடனிது, காமப்பாலில் கடவுளைக் கருதச் செய்த
காட்சியை யுணர்ந்த போது கசிந்துநான் அழுதேன் ஐயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி மலர்கள்

புல்லும் பூடும், கல்லும், காடும், கடலும் மலையும், எல்லையில்லா வானும் மீனும் மழையும் காற்றும் நல்ல வாழ்வை நாம் பெறச் செய்தன. ஆயினும் அவனை வளம்படுத்திய ஆன்றோர் சிந்தனைகள் ஆயிரம்! ஆயிரம்! அவர்களிற் சிலரை அஞ்சலி செய்து அவர் திருவடிக்குத்தூவிய சில மலர்களே இவை.

## தொல்காப்பியன்

ஐந்திணை மரபும் அகத்திணை
புறத்திணை ஒழுக்கமும்
முதல் கரு உரி என உலகை
மூவகைப் படுத்திய முறைமையும்
கந்தழியாகிய கடவுளைக் கருப்பொருளாகக்
காட்டிய காட்சியும்
தமிழியல் கெடாது அயல்மொழி
தழுவிடக் கூறிய பண்பும்
கண்ணினும் செவியனும் நுண்ணிதின்
உணரும் உணர்வுடையோரைக்
கலைஞரின் அகக்கண் காட்சியும்
அகச்செவி உணர்வும் அறிதரு திறமும்
களவு நிலையிலும் கற்புநிலையிலும் களங்கமறு
காதல் உணர்வைக் காட்டிய திறமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவு மெல்லாம் நினைந்து நினைந்து
என் நெஞ்சம் நெகிழ்ந்து
செந்தமிழ் மொழிக்கொரு கோபுரம்
கோட்டை கொடுமுடி கட்டிய
கோமகன் தொல்காப்பியன்
குரைகழல் சரணம் சரணமே!

## ஔவைப் பிராட்டியார்

அறத்தினைச் சொன்ன ஔவை அன்பின்
திறத்தினைச் சொன்ன தெய்வம்

மறத்தினை மன்னர் தேர மதியின்
திறத்தினால் உரைத்த தெய்வம்

மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பிக் காட்டிய கடவுள்

சீவன் முத்தராய்ச் செந்தமிழ்ச் சொத்தாய்ப்
பாவில் நடந்த பாதத் திருவடி
நாவில் நவிற்றி நான்பெற்ற பேறு
ஆவி கலந்தது ஆனந்த மானது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்கால் அம்மையார்

பேரழகின் பெட்டகமாய்ப்
பெண்மைக்கோர் இலக்கணமாய்
சீரோடு பிறந்து
சிறப்போடு மணம்முடித்து
பேரோடு வாழ்ந்து
பேயுருவைப் பெற்றதெய்வம்
நீராக எனையுருக்கி
என் நெஞ்சினிலே நின்ற தெய்வம்

அடியின் கீழிருந்து பாடும்
அற்புதக் கோல மிந்தத்
தடியனைச் செய்த கோலம்
தமிழிலே உரைக்க லாமோ
அடியிலே இருந்து உன்றன்
முடிவரை நோக்கி நோக்கித்
துடித்திட்டேன் தாயே, துவண்டுபோனேன்
துயரத்தால் மாண்டே போனேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலன்

தெய்வத்தைத் தேடித் தெருவெல்லாம் அலையாமல்
கையில்பிடித்துக் கருத்துள் அதைக்காட்டி
உய்ய வழியிதுதான் உலகீர் எனவுரைத்த
தெய்வம் திருமூலன் திருத்தாளைப் போற்றுகிறேன்!

# இளங்கோவடிகள்

சேர மன்னன் உரைத்த செழுந்தமிழ்
ஆரப் பருகியோர் அறிவர் முத்தமிழ்
வீரத் திருமகள் வேந்தியல் இதுவெனும்
சாரம் உரைத்த தாயைநான் போற்றுவன்!

# கம்பன்

வள்ளுவத்தின் விழுமியத்தை வரலாற்றுக் காப்பியமாய்
உள்ளி உருக உலகுக்கோர் காப்பியமாய்
அள்ளிப் பருக அலை எறியா ஆழ்கடலாய்
கள்ள மற்றோர் கற்பனைக்கோர் பெட்டகமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிச் சுவையை உணராத செவிடராய்த் தமிழ்மக்கள்
அவிச்சுவையே சுவையென்று தமிழ்ச் சுவையை
அறியாப் போது
கவிச்சுவையால் காலத்தை மறக்க வைத்த
கவிவேந்தன் கம்பமன்னன் கழல்கள் போற்றி!

## மணிவாசகன்

ஊனுருக்கி உள்ளுருக்கி என்னுயிர் புகுந்து
உயிர்க்குள்ளே உணர்வாகி
தேனிருக்கும் தெய்வத்தைத் தேடாமல் நானுணரச்
செய்த தேவே
வானிழிந்து மண் செழிக்க வாசகத் தேன்மாரி
சொரிந்த வானே
கான்மலர்ந்த கற்பகமே கருதா நாளில்லைக்
கழல் தொழுதேன் ஐயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பெருமான்

நீதியில் நிலைத்துநின்ற
    நேர்மையை உணரா மக்கள்
பேதித்துப் பிதற்றினார்கள்
    பிழைபல ஏற்றினார்கள்
சாதியில் நின்றா ரென்றும்
    சமயத்தில் நின்றாரென்றும்
வாதித்தார் நாவலரின்
    நடுநிலை உணராமக்கள்

காவல னாயினும் காண்பிழை கடியும்
நாவலன் பிறந்த நாட்டினிற் பிறந்தோம்
பாமலர் கொண்ட பணிவுரை ஒருபால்
கேவலப் படுத்திய கீழ்மைகள் ஒருபால்

சைவமும் தமிழும் கண்கள்
சைவமே தமிழின் கண்கள்
பைவரல் இரண்டு முற்றால்
உய்வரல் இல்லை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி

பாரதி பாட்டை அன்றிப்
படித்தறியான் இவனென்னும் பழி சுமந்தேன்
பாரதியே, நின்பாட்டை நீபட்ட
பாட்டைப் பன்னா னாக
ஊரறிய என்நாடறிய மேடையிலே
நின்றதிர முழக்கிப் பார்த்தேன்
யாரறிந்தார் நின்பாட்டை, நீபட்ட
பாட்டை, நான்பட்ட பாட்டை.

ஆயிரம் மைலுக்கப்பால் இருக்கின்ற
இமையந் தன்னை, இனியநீர்க் கங்கைதன்னை,
பாயிரம் செய்தாய், பாடினாய் எங்கள்
மலையென்றாய், இன்னறுங் கங்கை என்றாய்
ஆயிரம் சாதிகள், சாத்திரக் குப்பைகள்
அத்தனையும் பொய்யதை, ஓராயிர மாயிரம்
ஆயிரம் தடவைகள் சொன்னாய், அத்தனை
மக்களும் ஒர்குலம் ஒரின மென்றாய்.

சொல்லி அலுத்துப் போனாய்
சோராமல் சொல்லிக்கொண்டே யிருந்தாய்
சொல்லாத சொல்லொரு கோடி
என்ன சொல்லி எங்ஙனுணர்த்து கேனென்றாய்
கல்லாது யாவும் கற்றாய்
இந்தக் காயத்தையும் உன்கைக்குள் வைத்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லுக்குள் ஒளியினைக் கண்டாய்
ஆதி சக்தியென அனைத்தையுமுணர்ந்தாய்!

காவிய மாயிரம் கற்றவர் கூடக்
கவியுளங் காண்கிலர் என்றாய்
பாவிய பாரதிபாட்டைப் படித்தவர்கூட
நின்ஆன்ம பக்குவம் காணார்
காவியணிந்த வனல்ல கமண்டல குண்டலம்
தாடி தரித்தவனல்ல
சீவி முறுக்கிய மீசை சிரத்தின்
மூடிக் கட்டிய தலைப்பாகை

வேசம் போடவும் அறியாய்
வீணரைக் கூடவும் அறியாய்
தேசம் உனது பேச்சு
தெய்வம் உனது மூச்சு
நேசம் மனித நேயம்
உன் நெஞ்சே தெய்வத்தின் வாசம்
பாசம் ஒன்றுமே யில்லாய்
பக்குவப் பட்டே இவ்வுலகுக்கு வந்தாய்

பக்குவப் படுத்த வந்தாய்
பள்ளத்துள் கிடக்கக் கண்டாய்
தக்க தருணத்தில் வந்தாய்
தமிழனைத் தலைநிமிர்த்தி வைத்தாய்
திக்கெட்டும் தமிழ்முழக்கம் செய்தாய்
தெய்வத் தளத்தில் காலூன்றி நின்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத் துணையின்றி நின்றாய்
பத்துப் பேருமின்றிக் கடைசி
யாத்திரை சென்றாய்!

தத்துவ தளத்தில் நீநின்றாய்
தத்துவ மாகவே நின்றாய்
பித்துப் பிடித்த உலகர்
தம்பித்தத்திற் கேற்பவே பிதற்றி
சத்திய மான உன்கவிமேல்
தம் சார்பினை ஏற்றி யுரைத்தார்
மூத்தனாய் நீநின்ற நிலையை
முழுது முணர்ந்தவரில்லை

பாரதி மேடையில் பாட்டாய் நின்றேனெனப்
பத்திரிகைகள் எனைப் புகழ்ந்தது முண்டு
பாரதி பாட்டன்றி வேறு பாவறி யானிவனெனப்
பத்திரிகைகள் எனைப்பழித்தது முண்டு
பாரதியே, அன்றும் இன்றும்
பாடுகிறேன் நின்பாட்டை
பாரதி பாட்டால் சித்தும் தெளியும்
பக்தி வளரும் சிவசக்தி அருள் கூடிடுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகசுவாமி

நல்லைத் தலத்திலே நாதனைக் கண்டவன் நாதரந்தத்
தில்லைத் தலத்திலே சிவத்தோடு நின்றவன் திருவாரும்
செல்லப்பன் திருவடி சேவித்து வாழ்ந்தவன் பிறவித்
தொல்லை தவிர்த்திடத் தூமொழி தந்தவன்!

வெள்ளை வேட்டி தோளிலே ஒருதுண்டு
மெள்ள நடந்து போவதைக் கண்டவர்
தள்ளி நின்று தாழ்த்துவர் தலைதனை
கள்ள மற்றவர் கைகூப்பி வணங்குவர்!

சீவன் முத்தராய்ச் சிவன் திரு வீதியில்
தேவன் திருவடி நடந்ததைக் கண்டனன்
தாவி அவனடித் தஞ்சம் அடைந்திடப்
பாவி எனக்குப் பக்குவ மில்லையே!

ஆவி கிடந்து அழுது அரற்றுது
கூவி இரவில் நெஞ்சம் குமுறுது
நாவில் அவன்மொழி நன்றாய் இனிக்குது
யாவும் இழந்த யாழ்ப்பாணம் இருக்குது!

காலம் கடந்தபின் ஞானம் வந்தது
கோலம் குலைந்தபின் குமரிக்குத் திருமணம்
சீலமுணர்ந்த சிவயோக சாமியை
ஞாலம் உணர ஈழம் உயருமே!

யோக சுவாமிகள் திருவடி சரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்க்குறுதி மூன்று

திருக்குறளைத் தினம்படிப்போர் மனவயலின்
களையகலும் மண்திருந்திப் பண்படுமே
திருவாசகத் தேன்பருக மனமுருகித்
தெய்வப் பயிர்செழித்து வளர்ந்திடுமே
திருமந்திரம் தெளிந்துணரும் பேறுபெற்றால்
தெய்வத்தோ டொன்றுபடும் திருவாய்க்கும்மே
ஒருநாளும் மறாவதீர் உண்மையிது
ஒருபோதும் வேலனிதை மறந்ததில்லை!

# அடைக்கலம் கொடுத்த மண்ணே!

ஆங்கில நாட்டு மண்ணே!
அடைக்கலம் கொடுத்த மண்ணே!
தீங்கிலா மக்கள் வாழும்
திருவினைப் பெற்ற மண்ணே!
பூங்கொடி யனைய பெண்கள்
பூக்களாய்ச் சிரித்து நிற்கத்
தாங்கிய மண்ணே! உன்னைத்
தாயென வணங்கு கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுமை அர்த்தம் தோன்றும்

பூங்கொடி யனைய பெண்கள்
பூக்களாய்ச் சிரித்துப் போவார்;
வீங்கிய தோள்களோடு
விரைவுடன் நடந்து செல்லும்
ஆண்களை நோக்கும் போது
ஆளுமை அர்த்தம் தோன்றும்
பாங்கிலே பள்ளி செல்லும்
பளிச்சிடும் குழந்தைச் செல்வம்

## தெருவினைப் பார்த்தால் போதும்

பொறியியற் புலமை காட்டும்
புதுக்கிய வீடு வாசல்
வரிசையாய் நிற்கும் கார்கள்
வளத்தினைக் காட்டும் வீதி
அரிதெனச் சோம்பல் கொள்ளார்
அனைத்தையும் தாமே செய்வார்
தெரிந்திட இந்த நாட்டின்
தெருவினைப் பார்த்தால் போதும்!

## களித்திடப் பிறந்த மக்கள்

பனிச்சென்ற தோற்றம் பாலைப்
பக்குவம் செய்த பாகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்திடப் பிறந்த மக்கள்
உயர்வு தாழ்வினைக் கருதாவுள்ளம்
களித்திடப் பிறந்த மக்கள்
காதலில் புரளும் வாழ்க்கை
ஒழித்திட ஒன்று மில்லை
உலகினை ஆளும் ஒண்மை!

## தமிழராய் வாழுகின்றோம்!

ஆள்பாதி ஆடை பாதி
ஆன்றோர்கள் கூறக் கேட்டோம்
ஆளெனும் பொலிந்த தோற்றம்
ஆடையின் அழகுத் தோற்றம்
தாழ்விலா தமையும் போது
தரணியும் மதிக்கு மெம்மை
ஊழ்வினை யாலோ அன்றி
உழைப்பினைத் துறந்த தாலோ

ஆளுமை இழந்து பின்னர்
அழகுறு ஆடையும் இழந்து,
வாழ்வினை இழந்து, வந்தேறு
குடியென வசையும் பெற்று,
தாழ்வினைச் சுமந்து கொண்டும்
தமிழராய் வாழுகின் றோம்
கூழினைக் குடித்திட் டாலும்
குளித்தபின் குடிக்கச் சொன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணைத்திட ஆசை தோன்றும்

வெள்ளையர் தோற்றத் தாலே
விரிகதிர் வீசிப் போவார்
அள்ளியே பருகி அன்பால்
அணைத்திட ஆசை தோன்றும்
துள்ளிடும் மானைப் போன்ற
தோகையும் தோன்ற லாரும்
ஒள்ளிய உடையால் தம்மை
ஒப்பனை பலவும் செய்வார்!

## வரலாறு படைத்துவிட்டார்

திசையெலாம் சென்று கீழைத்
தேசத்தில் நாடு வென்றார்
வசையினைப் படைத்த போதும்
வரலாறு படைத்து விட்டார்
விசையுறு யந்தி ரங்கள்
விஞ்ஞானக் கருவி வெள்ளம்
வசதிகள் பலவும் கொண்ட
வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்!

## கலையிலே வல்லவர்கள்

அந்நிய மொழியிலுள்ள
அறிவினை அணைத்துக் கொள்வார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியச் சொல்லைக் கூட
ஆங்கிலப் படுத்திக் கொள்வார்
அந்நிய மெதுவா னாலும்
அதனத னளவ றிந்து
கண்ணியப் படுத்திக் கொள்ளும்
கலையிலே வல்ல வர்கள்!

## இங்கிலாந்தின் இயற்கை

ஆட்சியை இழந்த போதும்
ஆங்கில மொழியால் உலக
ஆட்சியில் வீற்றி ருக்கும்
அந்தஸ்தைப் பெற்றுக் கொண்ட
மாட்சியை மதியூ கத்தை
மற்றவ ரறியா இந்தச்
சூட்சியை இங்கி லாந்தின்
இயற்கையே எடுத்துக் காட்டும்!

## வசந்த நங்கை

வந்தனன் வசந்த னென்று
வழியிலே விழியை வைத்தாள்
சந்தனம் கண்ட காதற்
சந்தோஷமிகுதி யாலே
முந்தியே ஓடிச் சென்று
முற்றத்தில் கும்பம் வைத்தாள்
பந்தியில் பரிசம் வைத்தாள்
பாவைநேர் வசந்த மங்கை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தைக் காத்து நிற்பாள்

குருப்பித்துத் தளிர்க்கை கூப்பிக்
கோலமா மலர்கள் சூடி
உருப்பெற்று நின்ற அந்த
ஒய்யார வசந்த மங்கை
விருப்புற்ற கணவன் மீண்டு
வினையுற்றுச் சென்ற பின்னர்
கருப்புற்றுக் காய்ந்து கற்புடை
மகளிர் போல் காலத்தைக் காத்துநிற்பாள்!

## கைகட்டி நடுங்கார்

கடுங்குளிரிற் கூடக் கைவீதி
விடுவிடென்று நடப்பார், கைகட்டி
நடுங்கார், நள்ளிரவைப் பகலாக்கி
நகரத்தைத் தூய்மை செய்யும்
ஒடுங்காத உள்ளத்து உழைப்பாளர்;
ஒருநாளும் ஒழுங்கு தவறார்
சிருங்காரம் சிற்றின்ப மென்றாலும்
சீர்கெட்டு அலையாத சிறப்பு மிக்கோர்.

## தாய்வீடு தாற்பரியம்

தாய்வீடு என்று இந்தியத்
தமிழ்நாடு சென்றார்கள் நய்.யவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயாக நின்றலைந்து நடுத்தெருவிற்
கைப்பொருள் இழந்த தன்பின்
போய்விடு என்றுபல பொல்லாங்கு
சொல்லிப் போகவிட்டார் புகலிடத்தார்
தாய்நாடு சேய்நாடு தாற்பரியம்!
தமிழுக்கு உயிர் கொடுக்கும் தாற்பரியம்!

## விவேகிகள் உணர்ந்து கொள்க!

அகதியாய் வந்த எம்மை
அரண்மனை வாழ்வு தந்த
ஆங்கில மெம் அப்பனா? சிற்றப்பனா?
தகுதியைப் பார்த்தா தந்தான்?
தர்மத்தைப் பார்த்துத் தங்கள்
தகுதியைக் காக்கத் தந்தான்
குதிகுதி யென்று வந்த
கோலத்தை மறந்து வாழ்க்கைத்
தகுதியைத் தர்மத்தை மறந்து............
மிகுதியை விட்டு விட்டேன்
விளக்கியா சொல்ல வேண்டும்
விவேகிகள் உணர்ந்து கொள்க.

## புண்ணியம் செய்து வாழ்வோம்!

புகலிடந் தந்து சுக
போகங்கள் தந்த நாட்டின்
தகவுக்கு ஏற்ப வாழ்ந்து
தாங்கும் தரைதனின் புனிதம் காத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகவுக்குத் தாயைப் போல
மண்ணுக்கு மைந்தர் போல
புகழுக்கு உயிரை ஈந்து
புண்ணியம் செய்து வாழ்வோம்!

## நீதியுற்ற தமிழர்

ஊதியத்தில் ஒருபங்கு இந்த நாட்டின்
நாதியற்ற மக்களுக்கும் நாம்நல்க வேண்டும்
சாதியற்றுச் சமயமற்றுச் சமுதாயப் பார்வையோடு
நீதியுற்ற தமிழராய் நினைவில் நிற்க வேண்டும் நாம்.

## சந்ததி நடுத்தெருவில்

நன்றி கொன்ற மக்களுக்கு நரகமல்ல இருப்பிடம்
நன்றி கொன்றார் நலிந்துநலிந்து நடுநடுங்கி நிற்பரே
நன்றி கொன்றார் சந்ததி நடுத்தெருவில் நிற்குமே
நன்றி ஒன்று எண்ணிட நமச்சிவாயம் புகலிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஆங்கிலம் கற்றோர் இரண்டு வீதம்

ஆங்கிலம் இலங்கைத் தீவை
ஆண்டு நூற்றைம்ப தாண்டு
காலமாயாண்டுங் கூட
ஆங்கிலம் கற்றோர் எம்மில்
வீதத்தால் இரண்டே யென்று
ஆய்வினை நடத்திச் சொன்னார்
ஆங்கிலம் அகில மெல்லாம் ஆட்சி மொழி
அறிவுமொழி அனைத்துமெல்லாம்
அந்த மொழி பரப்புதற்குக் கோடிகோடி
தூங்காமற் பணிசெய்வார் கோடிகோடி
தூயதமிழ் படிப்பதற்கு ஆளே இல்லை
தூற்றுதற்கோ நம்மவருள் கோடிகோடி!

✪

# ஒற்றுமைக்கு ஒரு பாட்டு

மன்னும் கதிரமலை எங்கள் மலையே
மானில மீதிதுபோற் பிறிதில்லையே
இன்னறும் மாவலி ஆறெங்கள் ஆறே
இயம்புவீர் இது எல்லோர்க்கும் பொதுவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட இனத்தவர் எம்மவர்-எமை
வில்லேந்திக் காத்தஎம் மூத்தவர்
காட்டில் வாழ்ந்து களுத்தவர்-எமைக்
கடின உழைப்பால் காத்தவர்!

தாழ்ந்தவர் ஆவரோ அன்னவர்-ஐயா
தள்ளி வைப்பதும் நீதியோ
ஆயிரம் ஆண்டு கழியினும்-அவர்
அந்நிய ராகி விடுவரோ?

மதத்தை மாற்றி விடவில்லை-வாழும்
மாண்பை மறந்து விடவில்லை
இனத்தைக் காட்டி விடவில்லை-ஈனச்
செயல் களேதும் புரியவில்லை

வேடர் குலத்தவள் வள்ளி அவள்
வேலனை மணந்தவோர் கள்ளி
காலத்தை வென்றவோர் கன்னி-கதிர்
காமத்திலே காணதை எண்ணி!

மதங்கள் படைத்த மகான்கள்-மத
வெறியைப் படைத்தது முண்டோ?
இனங்கள் படைத்த இயற்கை-இன
வெறியைப் படைத்தது முண்டோ?

போதி மரத்தொரு மாதவா-நீ
போதித்த போதனை கொஞ்சமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதித்த சாதனை போதுமோ-ஐயா
போதிக்க இன்னும் வருவையோ!

சிலுவை மரத்தொரு தேவனே-நீ
சிந்திய ரத்தமும் கொஞ்சமோ
கதியை இழந்தவர் கர்த்தனே-புவி
காத்திட இன்னமும் வருவையோ!

அல்லா ஒருவன் பேரிலே-நீ
ஆயுதம் எடுத்தாய் போரிலே
வெல்லாமல் வென்ற வீரனே-நீ
விதைத்த நன்முத்துக்கள் விளைந்தவோ?

ஆயிர மாயிரம் ஞானிகள்-வந்து
போதித்த போதனை கொஞ்சமோ
இந்துமாக் கடல் கொள்ளுமோ-ஐயோ
இந்து மதக்கடல் நாறுதே!

போதித்துப் போதித்து ஓதுவார்-அதைப்
போதனை என்றும் புகலுவார்
மக்கள் அவையில் ஒருபேச்சு-மீண்டும்
மந்திரி சபையில் மறுபேச்சு

சட்ட மியற்றுவார் கையிலே-அதைச்
சாதிக்கு மாற்றல் இல்லையே
பத்திரிகையே என்றொரு சக்தியே-பாரைப்
படுத்தும் பாட்டினைப் பாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமை விதைக்கவா மதங்களும்-எங்கும்
வேற்றுமை பரப்பவா இனங்களும்
வேற்றுமைக் குள்ளேஓர் ஒற்றுமை-இது
வேதாந்தம் கண்டவோர் முத்திரை!

கருணையின் முடிவும் ஒன்றுதான்-அந்தக்
கர்த்தரின் முடிவும் ஒன்றுதான்
நாயகன் நபிமொழி ஒன்றுதான்-அந்த
நான்மறை முடிவும் ஒன்றுதான்!

ஒன்றே குலமென மூலவன்-அதை
அன்றே உரைத்த ஞானியன்
மென்று தின்னவா உரைத்தனன்-அதன்
மேன்மை உணர்ந்தில ரிந்நாட்டினர்!

சீவன் சிவமென்ற யோகநாதன்-இங்கு
சிங்களர் தமிழரைக் காணேனென்றான்
மூலப்பரம் பொருளொன்றினைக் கூட-நாம்
கீலமகீலமாய்க் கிழித்து விட்டோமே?

பிரித்தல் கணக்கைப் படித்துவிட்டோம்-நன்கு
கழித்துப் பார்க்கவும் கற்றுவிட்டோம்
கூட்டல் கணக்கை மறந்தாவிட்டோம்-ஐயோ
கூடிவாழவும் மறந்தே விட்டோம்!

சர்வ உலகுக்கும் சமஷ்டி என்றான்-அதைச்
சாதிக்க வழியொன்றும் சமைத்துத் தந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்.ஜி.வெல்ஸ் என்ற மேதையவன்-அந்த
மேதையின் போதனை ஏற்பதெப்போ!

எல்லாரு மொப்பும் ஒரு முடிவு-அதை
எய்தலா மென்பதும் ஒரு கனவு
வல்லான் வகுத்ததே வாய்க்காலென்பார்-அந்த
வழக்கை மறுத்தவர் வாழ்ந்ததுண்டோ?

இலங்கையை ஆண்டவர் எத்தனைபேர்-அவருள்
இராவணன் போலவோர் ஏந்தலுண்டோ
வேதங்கள் கற்றவன் இராவணன்தான்-நூறு
வேத்தியல் கற்றவன் இராவணன்தான்!

மானம் பெரிதென எண்ணிவிட்டான்-பொய்
மானம் பெரிதென எண்ணிவிட்டான்
நீதி உரைத்தவர் எல்லோருமே-பகை
நீ சர்களே என்று தூசித்தான்!

சாத்திரம் கற்றவன் என்றாலும்-அரக்கச்
சாதிவழி நின்று சிந்தித்தான்
நீதி வழி நிற்க மறுத்துவிட்டான்-ஈற்றில்
நீறாய் அழிந்து மடிந்துவிட்டான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனுவாச சாத்திரி சொன்னதென்ன?

ஆங்கிலப் புலமை யாலே
அகில மேவியக்க வாழ்ந்த
ஓங்கிய புகழோன் சீனு
வாச சாத்திரி சொன்னதென்ன?

"சில்வரங் ஒறேற்றர்" என்னும்
சீரிய நாமம் பெற்றும்
சிந்தையில் நிறைவே இல்லை

ஆங்கில மொழியைக் கற்க
ஆவியை அளித்தேன் முற்றாய்
அருந்தமிழ்த் தாயை நானே
அந்நியப் படுத்தி விட்டேன்
மீண்டும் நான் பிறந்து வந்தால்
மேன்மைகொள் தமிழைக் கற்று
மேதினி வியக்கச் செய்வேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை வேந்தன் சில்லையூர்ச் செல்வனின் பெரும் பிரிவு

பல்கலை வேந்தன் சில்லை;
பண்டிதர் அறியாப் பாவின்
வில்லினை எடுத்து வேக
அம்பினைத் தொடுத்த வேந்தன்;
சொல்லினை எடுத்துச் சுற்றிச்
சொல்லிலே அவையைக் கண்டோன்;
எல்லையே இல்லான்; இன்று
ஏகினான் ஏங்க விட்டு!

கல்லினை ஒத்தமேனி காளையாய்க் கண்ட கண்கள்;
கவியரங் கேறிநிற்கும் கவிஞனாய்க் கண்ட கண்கள்;
பல்கலை வேந்தன் என்னும் பட்டத்தைக் கண்ட கண்கள்;
பண்புடன் பழகும் அன்பு நண்பனாய்க் கண்ட கண்கள்;
செல்வத்தில் மிதந்தபோதும் சீரினை இழந்த போதும்
செம்மையில் திறம்பா வுன்றன் சிறப்பினைக் கண்ட கண்கள்;
வில்லினைப் பிரிந்த நாண்போல் வீரிய அம்பு மின்றி
விதிவழி சென்ற உன்றன் விதியினைக் கண்டவாறே.

தத்துவம் உணர்ந்தவர்க்குச் சாவில்லைச்
சஞ்சலமும் இல்லை, இல்லை
புத்தகம் சுமந்தவர்க்குப் புகழில்லை
புத்தியும் இல்லை, இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் இதுதான் சொன்னேன்
சாவினை வென்றோர் இல்லை.
வித்தகம் வேண்டா மையா
விதியினை வென்றார் உண்டோ?

# தவறுகள் தவறுகளே!

தவறுகள் சகசம் என்று
சமதர்மம் பேச லாமோ?
தவறுகள் தவ றுகளே
சமரசம் செய்யச் செய்ய
தவறுகள் சரிக ளாகிச்
சாக்கடை ஆறாய்ப் பாயும்
தவறுகள் கண்ட போது
தண்டனை அளிக்க வேண்டாம்
தண்ணளி காட்ட வேணும்!

வழுநிலை வழா நிலையெனும்
வழக்கினைக் கண்ட முன்னோர்
வழுவமைதி எனும் நிலையை
வழக்கத்திற் கொண்டு வந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுவமைதி வழியாக
வழக்கனே பெருகலாச்சு
மொழிபிறிது பிறிதாகி
முன்னூறு மொழிதோன்றலாச்சு!

# பச்சைத் தமிழாலே பாட்டெழுத வைக்காதே!

காமத்துக்கும் ஒரு கடவுள்
காமனெனும் பெயர்க் கடவுள்
கற்கின்ற காலத்தில்
காதலிலே மாட்டிவிட்டாய்
காசுழைக்காக் காலத்தில்
கல்யாண ஆசை வைத்தாய்!

சாமத்தில் எழுந்து
தெருச் சந்தியிலே நிற்கவைத்தாய்
சந்தர்ப்பம் தெரியாமல்
சன்னதம் கொள்ளவைத்தாய்
சாகாமல் சாகடித்தாய்
சக்தியெல்லாம் வீணடித்தாய்!

கருவைத் தடைசெய்யக்
கருவிகள் எத்தனையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பிடித்த
கற்றவரே கைதொழுதேன்
காமத்தைத் தடைசெய்யக்
கருவி ஒன்று வேண்டாமோ?

உருவைக் கெடுத்து
உணர்வைக் கெடுத்துக்
கல்வி உயர்வைக் கெடுத்துவிடும்
காமனே, கைதொழுதேன்
காளையரை விட்டுவிடு!

தருணமறிந்து கொஞ்சம்
தாமதித்து வந்தாலென்ன,
பருவத்தில் பயிர்செய்து
கொஞ்சம் பக்குவம் பெற்றபின்னர்
உருவமற்ற மன்மதனே
உன்னைப் புறங்காணும்
கருவம் வந்துவிடும்
காலால் மிதிப்பேன்
காமனே, உன்னைக்
காலனிடம் ஒப்படைப்பேன்!

மண்டையில் இருந்து
மயிர்க்காம வெள்ளம்
என் அடிவயிறு சென்றடைந்து
சண்டைகள் செய்கின்றது
ஐயையோ நடுச்சாம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையிலே நித்தம்
கொண்டையைச் சீவி
மினுக்கென்னை பூசும்
குமரிப் பெண்ணே உன்
குளிர்பார்வை கிட்டாதோ!

காமனே! ஆசைக்கடவுளே!
சங்கத் தமிழ்கற்ற சான்றோனைச்
சந்தைத் தமிழ்பேச வைக்காதே
கொச்சைத் தமிழ்கொண்டு

கோபத்தில் கொப்பளிக்கும்
பச்சைத் தமிழாலே
பாட்டெழுத வைக்காதே
பாவி உன்றன் பல்லை
உடைப்பே னடா!

## காளையரே! கன்னியரே!

காமத்தைத் தீர்க்கக்
கலியாணம் செய்துவைத்தார்
காமப் பருவத்தால்
கட்டறுத்த காளையர்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டிரண்டும் ஆறிரண்டும்
ஏற்ற வருவமென்றார்

காமப் பசியடங்கக்
கலியாணம் செய்த பின்னர்
கல்வியிற் பிரிந்தார்
பொருள் வயிற் பிரிந்தார்
போர் வயிற் பிரிந்தார்
புகழையும் குவித்தார்.

இன்று-
காமப் பசியடக்கக்
கன்னியரும் காளையரும்
கலியாணம் செய்யாமல்
கட்டறுந்த கேடுகளாய்
கண்ணிழந்த காமுகராய்க்
கருவாடாய்க் காய்ந்தபின்னர்
கலியாணம் செய்கின்றார்!

மூத்து முதிர்ந்து
முதிர்கன்னி யாயிருந்து
குமரிருந்து குரங்காகிக்
காத்திருந்து கூடக்
கலியாணம் ஆகவில்லை.

முன்னோர்கள் கண்டமுறை
பின்னேநாம் பேணும்முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவாழ் இளைஞருக்கு
ஏற்றமுறை எந்தமுறை?

சென்றதையும் இன்றுநாம்
கண்டதையும் உருமாற்றிக்
காலத்திற் கேற்ற
கலப்படங்கள் செய்வோமா?

## முதியோரே! முதியோரே!

காய்முற்றிக் கனியாகும்
கதிர்முற்றி மணியாகும்
கள்ளிமுற்றி அகிலாகும்
பிறைமுற்றி மதியாகும்

மாந்தரில் முதிர்ந்தவர்கள்
மாநிலத்தின் முத்துக்கள்
சாய்ந்து நடக்கின்றார்
சக்கர நாற்காலியில்
ஊர்ந்து வருகின்றார்

பாய்ந்து நடந்தவர்கள்
பறந்து திரிந்தவர்கள்
பகலை இரவாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவைப் பகலாக்கி
மாய்ந்து தேய்ந்து
மண்ணுக்குள் வேராகித்
தாங்கிக் காத்தவர்கள்
தள்ளாடி நடக்கின்றார்.

கண்ணாகி நின்றெமக்குக்
காட்சி அளித்தவர்கள்;
காதாகி நின்றெமது
கருத்தை வளர்த்தவர்கள்;
வீட்டுக்கு வெளியே
விறாந்தையில் கிடக்கின்றார்.

வயோதிபரே! வருந்தாதீர்!
வாலிபம் வராது;
வயாகராவும் தராது.

நிறைவேறா ஆசைகளை
நீற்றுப்போன நினைவுகளை
நெஞ்சம்வைத்து ஏங்காதீர்
நினைவில் வைத்துச் சாகாதீர்!

வாலிப நினைவு
வாட்டும் தான்,
வட்டிக் கணக்கைப்
பார்க்கும் தான்
வந்து வந்து
போகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயோதிபரே! வருந்தாதீர்!

உள்ளுக்குள்ளே ஒருலகம்
உங்கள் உள்ளுக் குள்ளே
ஒருலகம்; உங்களுக்காய்க்
காய்த்திருக்கு, கனிந்திருக்கு
கற்பனையில் அருந்துங்கள்!
காதாரச் சுவையுங்கள்!

தேவை கொஞ்சம் பெரியோரே!
ஆசை பெரிது, அதனாலே
அவதி பெரிது, பெரியோரே!
தெய்வத்திடமும் கேட்காதீர்
தேவை கருதிப் போகாதீர்.

# கல்வியின் நோக்கமென்ன?

கல்வியின் நோக்க மென்ன?
அறம் பொருள் இன்பம்
வீடு பெறல் என்று
ஆன்றோர்கள் சொன்னார்கள் அன்று

கல்வியின் நோக்கம் காசுழைத்தல்
கல்வியின் நோக்கம் சல்வீடு கட்டல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் நோக்கம் கலியாணம் செய்தல்
எஸ்எஸ்எல்சி பாசு செய்தால்
எடுக்கலாம் வேலை என்று
செல்லையா அண்ணார் சொன்னார்

கிளறிக்கல் வேலை யிலே
கிளார்க் காகச் சேர்ந்துவிட்டால்
முப்பது ரூபாய் முழுசாக,
கொழும்பிலே வேலை கொழுத்த சம்பளம்

வாத்தியா ராக வரவிருப்பம்
ஊரிலே வேலை ஓய்வானவேலை
தோட்டமும் செய்யலாம்; தொழில் வேறு
பார்க்கலாம்; தொந்தரவேயில்லை வேலை

சூத்திரம் போட்ட வளவோடு
கல்வீடு காசுபணம் நகைநட்டு
வில்லுவண்டி விலையுயர்ந்த மாட்டுவண்டி
எல்லாம் தருவார்கள் அம்மட்டா

பென்சனியர் பேரம் பலம்
சிங்கப்பூர்ச் சின்ன மணி
தங்கத்தில் வார்த்த தாம்பெற்ற
பிள்ளைகளைத் தம்பிக்குச் செய்யத்
தவமல்லோ கிடக்கின் றார்

கல்வியின் நோக்க மென்ன?
வீடு பெறல் தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம் கல்வீடு பெறல்;
காசுபணம் நகைநட்டுப் போட்ட
கன்னியரைக் கலியாணம் செய்து
கலவி பெறல்; எல்லாம்
கல்வியின் நோக்கம் தானே!

கல்லுங்கள், கல்லுங்கள், காளையரே!
காசுபணம் தேடலாம் கல்லுங்கள்
கலியாணம் செய்யலாம் கல்லுங்கள்
கல்வீட்டை அடையாளம் கல்லுங்கள்!

# மாதினிக்குத் தந்தை வேலன்

(19-11-1989 அன்று பிறந்தாள் வாழ்த்தாகப்பாடி அனுப்பியது)

ஒரு மகள் தன்னைப் பெற்றேன்
உணர்வெலாம் அவட்கே தந்தேன்
திருமகள் போல் வளர்த்தேன்
திருமுருகிறைவன் தன்னை
மருமகனாகத் தந்து
மாண்பொடு வாழ்வு பெற்றாய்
கருமணி அனைய ஞானப்
புதல்வராற் பொலிவும் பெற்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவம் புரிந்ததாலே
சங்கடம் தீர்ந்து போச்சு
புத்தகம் படித்த பேர்க்கும்
புரியாத ஞானச் செல்வ
வித்தகம் விளங்கியாச்சு
வேதனைகவலை வெள்ளம்
மெத்தவும் அலைத்தால் என்ன
மெய்யுணர்வொன்றே போதும்.

✪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org